Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, AUGUST 16, 2021

திங்கட்கிழமை ஒகஸ்ட் 16, 2021 | ஒளி: 07 கதிர்: 75 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## மடுத் திருத்தலத்தின் ஆவணித் திருவிழா



மன்னார், மடு அன்னையின் வருடாந்த ஆவணித் திருவிழா திருப்பலி, நேற்று (15) காலை 6.15 மணிக்கு கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

திருவிழா திருப்பலியை, மன்னார் மறை மாவட்ட ஆயர் வண. இம்மானுவேல் பெர்ணான்டோ ஆண்டகை தலைமையில், சிலாபம் மறை மாவட்ட ஆயர் வண. அருட்கலாநிதி வலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை, குருக்கள் இணைந்து கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

(முழு விவரம் P4)

பிரசித்தமான, பொது இடங்களில்

# சும்மா சுற்றி திரியாதீர்கள்

## நேற்றிரவு முதல் புதுக் கட்டுப்பாடு

## நாளை முதல் திருமணத்துக்குத் தடை



மீண்டும் அறிவிக்கும் வரையிலும் வீடுகள், ஹோட்டல்கள் மற்றும் மண்டபங்களில், திருமண வைபவங்களை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படாது எனத் தெரிவித்துள்ள கொவிட்-19 தொற்றொழிப்புச் செயலணியின் பிரதானி இராணுவத் தளபதி ஷவேந்திர சில்வா, இந்த நடைமுறை ஒகஸ்ட் 17ஆம் திகதி முதல் (நாளை) அமல்படுத்தப்படும் என அறிவித்துள்ளார். கொரோனா வைரஸ் தொற்றுவதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஒன்றாகவே இத்தீர்மானம் எட்டப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## சுய கட்டுப்பாட்டை கடைப்பிடிக்கவும்



கொரோனா தொற்றிலிருந்து உயிரைப் பாதுகாத்துக்குக் கொள்வதற்காக, இன்று (16) திங்கட்கிழமை முதல் சுய பயணக் கட்டுப்பாட்டை கடைப்பிடிக்குமாறு, இலங்கை பொதுமக்கள் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண, பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

மிகப் பொறுப்புடன் நடந்துகொள்ளவும். தேவையான அத்தியாவசிய பொருள்களை சேமித்துகொண்டு, வீடுகளுக்குள்ளே முடங்கி இருக்கவும்.

தொடர்ச்சி P2

## முழு முடக்கத்துக்கு தயார்



நாட்டை முழுமையாக முடக்குவதற்கான வைத்தியப் பரிந்துரைகளை வழங்கினால், அதனடிப்படையில் செயற்படுவதற்கு அரசாங்கம் எந்நேரமும் தயாராகவே இருக்கிறது என ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜெயசுமன தெரிவித்தார். எனினும், நாட்டை முழுமையாக முடக்குமாறு வைத்திய நிபுணர்கள் இதுவரையிலும் உத்தியோகபூர்வமாக எந்தவொரு பரிந்துரைகளையும் முன்வைக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2




## 75ஆவது சுதந்திர தினம்

இந்தியாவின் 75ஆவது சுதந்திர தினம், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தலைமையில், கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நேற்று (15) நடைபெற்றது. (படம்: தூதரக ஊடகப்பிரிவு)

## எனது யோசனையை ஆராய்ந்து தலைவர்களை அழைக்கவும்

### ரணில் கோரிக்கை



தனது யோசனையை ஆராய்ந்து, கொரோனா தொற்று மென்மேலும் வியாபிக்காமல் இருப்பதற்கான செயற்பாட்டைத் தயாரிப்பதற்காக, கட்சித் தலைவர்களின் கூட்டத்தை உடனடியாகக் கூட்டுமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம், முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில்

தொடர்ச்சி P2

## 12 வயதுக்கு மேற்பட்ட சிறார்களுக்கு தடுப்பூசி

பன்னிரெண்டு வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு கட்டம் கட்டமாக கொவிட்-19 தடுப்பூசிகளை பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். ஹம்பாந்தோட்டை வைத்தியசாலையில் நிறுவப்பட்டுள்ள தென் மாகாண கொவிட்-19 சிறுவர் சிகிச்சை பிரிவைத் திறந்து வைக்கும் நிகழ்வு, நேற்று (15) நடைபெற்றது. தங்காலை கால்டன் இல்லத்திலிருந்து காணொளி தொழில்நுட்பம் ஊடாக இணைந்து கொண்ட போதே, பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## தாக்குதல் அச்சுறுத்தல் முன்னாள் வீரர் கைது

கொழும்பில் உள்ள நிறுவனமொன்றின் மீது தாக்குதல் நடத்தப்படுமென மிரட்டல் விடுத்த இலங்கை விமானப் படையின் முன்னாள் விமானப் படை வீரர் கைது செய்யப்பட்டுள்ளார். கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த முறைப்பாட்டை அடுத்தே, அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இ.போ.சவில் 285 பேருக்கு கொரோனா



இலங்கை போக்குவரத்து சபையின் 285 ஊழியர்கள் இதுவரை கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அவர்கள், வைத்தியசாலைகள் மற்றும் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சர் கூறினார்.

அதிக எண்ணிக்கையிலான போக்குவரத்து சபை ஊழியர்கள் ஆபத்தில் இருப்பதால், இன்று (16) முதல் புதிய ஒழுங்குமுறையின் கீழ், ஊழியர்கள் சேவைக்கு அழைக்கப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதன்படி, சாரதி மற்றும் நடத்துநர் உள்ளிட்ட சபை ஊழியர்களையும் இரண்டு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு 15 நாள்களுக்கும் ஒருமுறை வேலைக்கு அழைக்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## சபையை ஒரு நாள் மட்டும் கூட்டவும்

### சபாநாயகரிடம் எதிரணி கோரும்



பாராளுமன்றத்தை செவ்வாய்க்கிழமை (17) மட்டும் கூட்டி, கொரோனா விசேட ஏற்பாடுகள் சட்டமூலத்தை நிறைவேற்றிக்கொண்டு அதன்பின்னர், கூட்டத்தை ஒத்திவைக்குமாறு, எதிர்க்கட்சிகள் கோரிக்கையொன்றை முன்வைக்கவுள்ளன.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில், நாளை (16) நடைபெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே மேற்கண்ட கோரிக்கை முன்வைக்கவுள்ளதாக எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

ஆப்கானிஸ்தானில் இருக்கும்

## ‘இலங்கையர்களை அழைத்து வருவோம்’



ஆப்கானிஸ்தானில் உள்நாட்டுப் போர் வலுப்பெற்றுள்ள நிலையில், அங்குள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான விசேட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

"சுமார் 50 இலங்கையர்கள் ஆப்கானிஸ்தானில் வசிக்கின்றனர்" என வெளிவிவகார அமைச்சின் செயலாளர், பேராசிரியர் ஓய்வுபெற்ற அட்மிரல் ஜயநாத் கொழம்பகே தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## போற்றியில் போட்டி நடத்திய 11 இளைஞர்கள் கைது

காமினி பண்டார இலங்கதிலக்க



தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி, கால்பந்து சுற்றுப்போட்டியை நடத்திய இளைஞர்கள் 11 பேரை, நோர்வூட் பொலிஸார் கைது செய்துள்ளனர். போற்றி தோட்ட விளையாட்டு மைதானத்தில் இவ்வாறு கால்பந்து போட்டிகளை நடத்திக்கொண்டிருந்த 11 பேர், நேற்று (15)

தொடர்ச்சி P2

## திருவிழாக்கள் நிறுத்தம்

செ.கீதாஞ்சன்

மல்லாவி மற்றும் மாந்தை கிழக்கு சுகாதார பிரிவுக்குட்பட்ட சகல வழிபாட்டுத் தலங்களிலும் வழமையான ஆராதனைகளை பத்து அல்லது அதற்கு குறைந்தோரின் பங்குபற்றுதலுடன் நடத்தமுடியும் எனத் தெரிவித்துள்ள மல்லாவி மற்றும் மாந்தை கிழக்கு சுகாதார வைத்திய அதிகாரி க. சுசீந்திரன், விசேட ஆராதனைகள் பொங்கல் நிகழ்வுகள்

தொடர்ச்சி P2

LK Newspapers Viber Community

PAGE 1 தொடர்ச்சிகள்

# சும்மா சுற்றி திரியாதீர்கள்



மக்கள் ஒன்றுகூடுவதற்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதியளிக்கப்படாது. இந்த நடைமுறை நேற்று (15) நள்ளிரவு முதல் அமலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது என அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உணவகங்களில், அதன் கொள்ளளவில் 50 சதவீதமானோர் மட்டுமே ஒரு தடவையில் இருக்கமுடியும். அதற்கு அதிகமானோர் இருக்கமுடியாது. அத்துடன், பிரசித்தமான, பொது இடங்களில் சுற்றித்திரிவதை கூடுமானவரையிலும் தவிர்த்துக் கொள்ளுமாறு மக்களிடம் அரசாங்கம் கோரியுள்ளது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'சுய கட்டுப்பாட்டை கடைப்பிடிக்கவும்'

"கூடியவகையில் சுய கட்டுப்பாடுடன் இருக்கவேண்டும். வீடுகளை விட்டு வெளியேறாமல் இருப்பது சகலருக்கும் நல்லது" என்றார்.

அரசாங்கம் மற்றும் அதிகாரிகளின் தீர்மானம் தொடர்பில் அதிருப்தி தெரிவித்த அவர், கேக் துண்டுகளை சாப்பிட்டுக்கொண்டு குளிரூட்டப்பட்ட அறைகளுக்குள் இது குறித்த தீர்மானங்களை எடுக்காமல், மக்கள் படும் துன்பங்களைப் பார்த்து தீர்மானங்களை எடுக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# முழு முடக்கத்துக்கு தயார்

வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளின் பிரகாரமே அரசாங்கம் சகல தீர்மானங்களையும் எடுக்கிறது. அதேபோல, அந்த ஆலோசனைகளை செயற்படுத்துவதற்கும் அரசாங்கம் எந்நேரமும் தயாராகவே இருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசியல் கட்சிகளின் பூனைகளாக இருக்கும் சிலர், ஏதோவொரு வகையில் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்கின்றனர் எனத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், அதற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்றார்.

நாட்டை முழுமையாக முடக்குமாறு சுகாதாரப் பிரிவிடமிருந்து உத்தியோகபூர்வமாக பரிந்துரைகள் கிடைக்குமாயின் அதனை பிற்பற்றுவதற்கு ஒருபோதும் பின்னிற்க மாட்டோம் எனத் தெரிவித்த அவர், யார், எதனைக் கூறினாலும் அன்றாடம் கூலி வேலை செய்து வருமானத்தை தேடிக்கொண்டு வாழுவோர் தொடர்பில் அரசாங்கம் ஆகக் கூடுதலான கரிசனையைக் காட்டுகின்றது என்றார்.

நாட்டின் நிலைமைத் தொடர்பில் ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் தொடர்ச்சியாக விசேட கவனம் செலுத்திவருகின்றது எனத் தெரிவித்த அவர், கொரோனா தொற்றை கருத்தில்கொண்டு, பயணக் கட்டுப்பாடுகளை சுயமாக ஏற்படுத்திக்கொள்ளுமாறு, பொதுமக்களிடம் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# சபையை ஒரு நாள் மட்டும் கூட்டவும்



கொரோனா வைரஸ் மிகவேகமாகப் பரவிவரும் நிலையில், நாட்டில் ஏற்பட்டிருக்கும் நிலைமையைக் கருத்தில்கொண்டே மேற்கண்ட தீர்மானத்தை எடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பில் குழு, (கட்சித் தலைவர்கள் கூட்டம்) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில், இன்று (16) காலை 11 மணிக்கு கூடவுள்ளது. அமைச்சர் தினேஷ் குணவர்தன விடுத்துள்ள வேண்டுகோளுக்கு அமையவே, கட்சித் தலைவர்களின் அவசரக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

"ஏனைய நாடுகளில் கொரோனா சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட சட்டமாக்கப்பட்டுள்ளது. நமது நாட்டில் அச்சட்டமூலத்தை சபைக்கு சமர்ப்பிப்பதற்கு ஒன்றரை வருடங்களுக்கு மேல் சென்றுள்ளது. இது பிரச்சினையான விடயமாகும். எனினும், விவாதத்துக்குப் பின்னர் அந்த சட்டமூலத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக எதிர்க்கட்சிகள் பூரண ஒத்துழைப்பை நல்கும்" என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி தெரிவித்தார்.

# எனது யோசனையை ஆராய்ந்து தலைவர்களை அழைக்கவும்

ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார். உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கை அலுவலகத்தின் சுயாதீன நிபுணர்களின் குழுவின் 5ஆவது கூட்டத்தில், இலங்கையில் ஜனவரி மாதமளவில் கொரோனா மரணங்கள் 30,000 வரை அதிகரிக்கலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத் துறையினர் கொரோனா விடயங்களில் முழுதாக ஈடுபட்டுள்ளதால் சுகாதாரத்துறையும் வீழ்ச்சியடையும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது என்றார்.

எனவே, கடந்த வருடம் மே மாதம் , கொரோனாவைக் கட்டுப்படுத்த அரசாங்கம் எடுத்த தீர்மானத்தை, தற்போதாவது எடுத்தால் தான், கொரோனா மரணங்களை 12,000 ஆக குறைக்கலாம் என்றும் இதன்மூலம் 18,000 உயிர்களைக் காப்பாற்றலாம் என்றும் தெரிவித்தார்.

கொரோனாவைக் கட்டுப்படுத்தாவிட்டால் இந்நாட்டில் பாரிய அழிவு ஏற்படும் என எச்சரித்த அவர், எனவே கொரோனாவைக் கட்டுப்படுத்துவது தொடர்பில், ஐக்கிய தேசியக் கட்சி யோசனைகளை முன்வைத்துள்ளதாகவும் இதற்கான விவாத்ததுக்கு நாள் ஒன்றை ஒதுக்கித் தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளோம். ஆனால், பாராளுமன்றத்தைத் திறப்பதற்கான உரிய நேரம் இதுவல்ல. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கொரோனா தொற்றியுள்ளது என்றார்.

எனினும், இது முக்கிய விடயம். எனவே, ஜனாதிபதியிடம் விசேட கோரிக்கையை முன்வைக்கிறோம். கட்சித் தலைவர்களை அழைக்கவும். இதில் பிரதமர், சபாநாயகர், சுகாதார அமைச்சர்களும் அழைக்கப்பட வேண்டும்.

அரசாங்கம் முன்னெடுக்கவுள்ள வேலைத்திட்டம் குறித்து எம்மை தெளிவுப்படுத்த வேண்டும் என்பதுடன், மரணங்களைக் குறைக்க, சுகாதார வசதிகளை அதிகரிப்பது குறித்து எமது அபிப்ராயங்கள் குறித்து கலந்துரையாட வேண்டும் என்றார்.

எனவே, தனது இந்த யோசனையை ஆராய்ந்து கட்சித் தலைவர்களை அழைக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்பதாகத் தெரிவித்தார்.

# 12 வயதுக்கு மேற்பட்ட சிறார்களுக்கு தடுப்பூசி

சிறுவர்களுக்குத் தடுப்பூசி வழங்கும் போது பல்வேறு பிரச்சினைகள் காணப்படும் சிறுவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் பிரதமர் தெரிவித்தார்.

பிரதமரின் பாரியார் திருமதி ஷிரந்தி ராஜபக்ஷ சம்பிரதாய முறைப்படி விளக்கேற்றி ஹம்பாந்தோட்டை வைத்தியசாலையில் நிறுவப்பட்டுள்ள தென் மாகாண கொவிட்-19 சிறுவர் சிகிச்சை பிரிவைத் திறந்துவைத்தார்.

ஹம்பாந்தோட்டை வைத்தியசாலையில் கொவிட் சிகிச்சை நடவடிக்கைகள் 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல் இதுவரை சுமார் 6,000 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

கொவிட் தொற்றுக்கு உள்ளாகும் சிறுவர்களுக்கு இதுவரை மகளிர் வார்டு வளாகத்திலேயே சிகிச்சையளிக்கப்பட்டு வந்தது.

புதிய பிரிவு நிறுவப்பட்டதன் ஊடாக சிறுவர்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்த முடியும் என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

குறித்த நிகழ்வில் காணொளி தொழில்நுட்பம் ஊடாக இணைந்து கொண்டு தொடர்ந்து உரையாற்றிய பிரதமர்,

"நமது நாட்டின் பிள்ளைகளைப் பாதுகாப்பது நம் அனைவரதும் பொறுப்பாகும். அவர்களே நமது நாட்டின் எதிர்காலம். இன்று பெற்றோர் போன்றே ஓர் அரசாங்கமாக நாமும் குழந்தைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ளோம் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

"வரலாற்றை நோக்கும் போது, உலகம் பல்வேறு தொற்றுகளுக்கு முகங்கொடுத்துள்ளது. தொழில்நுட்ப ரீதியில் எவ்வளவு முன்னேற்றம் காண்பினும் தொற்றுகளுக்கு முறையான தீர்வைக் காண்பது மிகவும் கஷ்டமானது என்பதை அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

"அதனால் நாம் இதுபோன்ற காலப்பகுதியில் வேறு சந்தர்ப்பங்களைவிட பலமாகவும், ஒற்றுமையாகவும் இவ்வாறான தொற்றுகளை எதிர்கொள்ள வேண்டும்" என்றார்.

# திருவிழாக்கள் நிறுத்தம்

மற்றும் திருவிழாக்கள் என்பவற்றை நிறுத்த வேண்டும் என அறிவித்துள்ளார்.

மல்லாவி,மாந்தை கிழக்கு பிரதேசங்களில் கொவிட் நோயாளர்களின் தாக்கம் வேகமாக அதிகரித்து வருகின்றது. இந்நிலையில், இந்து ஆலயங்களில் பலவற்றில் இருந்து விசேட திருவிழாக்கள் மற்றும் பொங்கல் நிகழ்வுகளை நடத்துவதற்கு அனுமதி கோரப்படுகின்றது.

எந்த ஒரு வழிபாட்டு தலங்களிலும் ஒரே நேரத்தில் பத்திற்கும் மேற்பட்டவர்கள் வழிபாட்டில் ஈடுபடல் அல்லது வழிபாட்டு தலங்களில் கொவிட்-19 சுகாதார நடைமுறைகளை பின்பற்றத்தவறுதல் போன்றவற்றிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கிராம சேவகர் ஊடாக இந்த அறிவிப்பு வழிபாட்டு தலங்களுக்கு விடுக்கப்பட்டுள்ளது.

# தாக்குதல் அச்சுறுத்தல் முன்னாள் வீரர் கைது

கொழும்பில் அமைந்துள்ள 'வெளிநாட்டு சர்வதேச உறவு' எனும் நிறுவனத்தின் அதிகாரி ஒருவர், செய்த முறைப்பாட்டுக்கு அமையவே, இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் விமானிப் படை வீரரான கீர்த்தி ரத்நாயக்க என்பவரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சந்தேகநபரிடம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றார்.

இந்நிலையில், இலங்கை விமானப் படை ஊடகப்பிரிவு அனுப்பிவைத்துள்ள அறிக்கையில்,

கீர்த்தி ரத்நாயக்க, விமானப் படையின் புலனாய்வு அதிகாரியாக கடமையாற்றவில்லை. கட்டுநாயக்க விமானப் படை முகாமில் காசாளராக இருந்த அவர், நிதி முறைக்கேடு குற்றச்சாட்டின் கீழ், விமானப் படையிலிருந்து 2004ஆம் ஆண்டு நீக்கப்பட்டார்.

விமானப் படையின் நிர்வாகப் பிரிவில் 1997ஆம் ஆண்டு இணைந்துகொண்ட அவர், விமானப் படையின் விமானி அந்தஸ்துக்கு பதவி உயர்த்தப்பட்டிருந்தார் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போற்றியில் போட்டி நடத்திய 11 இளைஞர்கள் கைது

மாலை கைது செய்யப்பட்டனர் என நோர்வூட் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் பீ.ஏ.பி. ஆர் பிரேமலால் தெரிவித்தார்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் போற்றி தோட்ட மைதானத்தில் சட்டவிரோதமான முறையில் போட்டிகள் நடத்தப்படுவதாக தகவல்கள் கிடைத்தன. அதனையத்து மேற்கொள்ள சுற்றிவளைப்பில் மைதானத்தில் இருந்த 40க்கும் மேற்பட்டோர் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். ஏற்பாட்டாளர்கள் உள்ளிட்ட 11 இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 20-30 வயதுக்கு இடைப்பட்ட அந்த 11 இளைஞர்களையும் ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் இன்று (16) ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.



# இலங்கையர்களை அழைத்துவருவோம்

43 இலங்கையர்கள் காபுல் நகரிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான தூதரகத்தில் பணியாற்றுகின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் இலங்கைக்குத் திரும்புவதற்கான விமான பயணச்சீட்டுகளை முன்பதிவு செய்துள்ளனர் என்றும் அறியமுடிகின்றது.

அந்நாட்டில் காணப்படும் விமான சேவைக்கான வசதிகளுக்கு அமைய, இலங்கையர்கள் நாடு திரும்பவுள்ளனர்.

20 வருடங்களாக ஆப்கானிஸ்தான் இராணுவத்தின் யுத்த நடவடிக்கையில் இணைந்திருந்த அமெரிக்கா உள்ளிட்ட பிரபல மேற்குலக நாடுகளின் இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறியதன் பின்னர் தலிபான்கள், ஆப்கானிஸ்தானின் அதிகாரத்தைக் கைப்பற்ற தமது போராட்டத்தை வலுப்படுத்தினர். அதற்கமைய, ஆப்கானிஸ்தானின் தலைநகரானா காபுல் நகரத்திலும் நேற்று (15) பிற்பகல் தலிபான்கள் உள்நுழைந்துள்ளனர்.

அந்நாட்டின் ஏனைய பிரபல நகரங்களை தலிபான்கள் ஏற்கெனவே கைப்பற்றியுள்ளனர்.



# இ.போ.சவில் 285 பேருக்கு கொரோனா

பொதுமக்களுக்கு எந்தவித சிரமமும் இன்றி தேவையான பஸ்களையும் சேவையில் ஈடுபடுத்துமாறு அனைத்து டிப்போ அதிகாரிகளும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.



LK Newspapers Vibe Community

பயன்படுத்திய முகக் கவசங்களை

# குப்பையில் வீசாது, எரித்து விடுங்கள்

## பாரியளவில் தொற்றைக் கட்டுப்படுத்த முடியும்



முகக் கவசங்களைப் பயன்படுத்தியதன் பின்னர், அவற்றை குப்பைகளில் போட வேண்டாமெனத் தெரிவிக்கும் பேராசிரியர் அஜந்தா பெரேரா, முகக் கவசங்களை வீடுகளிலேயே எரிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்த பேராசிரியர் அஜந்தா பெரேரா, நாட்டிலுள்ள 21 மில்லியன் மக்களும் முகக் கவசங்களைப் பயன்படுத்துகிறார்கள். இவர்களில் பலர் ஒன்றல்லது, இரண்டு தடவைகள் மாத்திரமே முகக் கவசத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

பல மில்லியன் கணக்கான முகக் கவசங்கள் வீசப்படுகின்றன. பலர் எந்தவிதமான சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களையும் பின்பற்றாது, முகக் கவசங்களை வீசி எறிகின்றனர். முகக் கவசங்களை வீசும்போது, அவற்றைக் கொதிக்கும் நீரில் அவித்துவிட்டு அல்லது கிருமி நாசினி கொண்டு கழுவி விட்டு அப்புறப்படுத்த வேண்டும் எனவும் பேராசிரியர் அஜந்தா பெரேரா தெரிவித்தார்.

கண்ட இடங்களில் முகக் கவசங்களை பொதுமக்கள் வீசக்கூடாது. தங்களை மாத்திரம், முகக் கவசம் பாதுகாத்தால் போதுமென்ற மனநிலையில் இருக்கும் இலங்கையர்கள் பலர், முகக் கவசங்களைப் பயன்படுத்தியதன் பின்னர் கண்டகண்ட இடங்களில் வீசுகின்றனர்.

முகக் கவசங்களில் இருந்து கொரோனா வைரஸ் பரவுமென்பதால், சுகாதார பாதுகாப்பு அறிவுத்தல்களுக்கு அமைய முகக் கவசங்களைப் பாதுகாப்பாக அகற்ற வேண்டும். தொற்றாளர்கள் பயன்படுத்தும் முகக் கவசங்கள் எரிக்கப்பட வேண்டும் என்றார்.

முகக் கவசங்களை குப்பைகளில் போட வேண்டாமெனவும், அவற்றை வீடுகளிலேயே எரிக்க வேண்டும் எனவும் தெரிவித்த அவர், இவ்வாறு செய்தால் பாரியளவில் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் தெரிவித்தார்.

# 582 பேரை பொலிஸ் திருப்பி அனுப்பியது




மேல் மாகாணத்தில் இருந்து வெளியேறவும், உள்நுழையவும் முயற்சித்த 582 பேர் இதுவரையில் திருப்பி அனுப்பப்பட்டு உள்ளதாகத் தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண, மாகாணங்களுக்கு இடையிலான பஸ் போக்குவரத்துகள் முன்னெடுக்கப்படாது எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், மேல் மாகாணத்துக்குள் உள்நுழையும், வெளியேறும் பகுதிகளில் மாத்திரம் இதுவரையில் 4 ஆயிரத்து 544 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. 333 வாகனங்களில் வந்த 582 பேர் திருப்பி அனுப்பட்டுள்ளனர்.

மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடுகளை மீறி, மேல் மாகாணத்துக்கு உள்நுழையவும், அங்கிருந்து வெளியேற முயற்சித்தவர்களே இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

மாகாணங்களுக்கு இடையிலான பாதுகாப்பு நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் அனைத்து வழிகளிலும் வீதித் தடைகளை அமைத்து பாதுகாப்புக் கடமைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. ஏனைய மாகாணங்களுக்கு இடையிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. மாகாணங்களுக்கு இடையிலானப் பொதுப் போக்குவரத்து இடம்பெறாதெனவும் தெரிவித்தார்.



## நூல் வெளியீட்டு நிகழ்வு

'கலாபூஷணம் ஓவியர் எஸ்.டி.சாமி' எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு புரவலரின் இல்லத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது நூலின் முதற் பிரதியை புதிய அலை கலை வட்டத்தின் ஸ்தாபகர் ராதா மேத்தாவிடமிருந்து இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் பெறுவதையும் அருகில் நூலாசிரியர் எஸ்.டி.சாமியும் காணப்படுகிறார்.

# 'எதிர்க்கட்சியினருக்கு பதிலளிப்பது நேரத்தை வீணாக்கும் செயல்'

எதிர்க்கட்சியினரின் கருத்துகளுக்குப் பதிலளிப்பது நேரத்தை வீணாக்கும் செயலனெ தெரிவித்த இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, கொரோனா வைரஸால் நாடு மோசமான நிலைக்கு செல்ல வேண்டும் என்றே எதிர்க்கட்சியினர் விரும்புவதாகவும் தெரிவித்தார்.

நாட்டில் இப்படி ஒரு எதிர்க்கட்சி இருப்பது வருத்தமளிக்கிறது. எனினும் எதிர்க் கட்சியினர், அரசாங்கத்தில் இல்லை. அவர்கள் எதிர்க்கட்சியினர் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

நாட்டில் கொரோனா வைரஸ் நிலைமைகளைக் கட்டுப்படுத்தவும், சூழ்நிலையை சமாளிக்கவும், நாட்டை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்கும் அரசாங்கம் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

பொலிஸ் எனக்கூறி அறிமுகப்படுத்தி;

# வயோதிபர்களிடம் பணம், நகை கொள்ளை

தன்னைப் பொலிஸ்காரர் எனக் கூறி, தந்திரமான முறையில் நகை, பணத்தைக் கொள்ளையடித்த நபரை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

நாவற்குழி, அரியாலை, மானிப்பாய் போன்ற இடங்களில் தனிமையில் நடமாடும் வயோதிபர்கள், பெண்களைக் குறிவைத்து அவர்களிடம் சென்று தன்னை பொலிஸ் என அறிமுகப்படுத்தி, தொடர்ந்து, அவர்களுடன் பேசி அவர்களின் உடைமையில் இருக்கும் நகை, பணம்,அலைபேசி என்பனவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளார்.

குறித்த நபர், கடந்த இரண்டு வாரங்களில் ஆறு இடங்களில் கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டு வந்துள்ளார். இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. இது தொடர்பான விசாரணைகளை, குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டனர். கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் யாழ். நாவற்குழி பகுதியை சேர்ந்த 30 வயதுடைய நபர், யாழ். குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இரண்டு தங்கச் சங்கிலி, 17,000 ரூபாய் பணம் உட்பட மூன்றரை இலட்சம் ரூபாய் பெறுமதியான கொள்ளையிட்ட பொருட்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

இதேவேளை குறித்த கொள்ளைச் சம்பவங்களுக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் மீட்கப்பட்டதுடன் கொள்ளையிடப்பட்ட பொருட்களை விற்பனை செய்த சந்தேக நபரின் மனைவியும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். குறித்த கைது நடவடிக்கை, யாழ். குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி நெவின் பிரியந்த தலைமையில் பொலிஸ் உத்தியோகத்தர்களான விஜயகாந்த் வாகிசன் குழுவினரால் முன்னெடுக்கப்பட்டது.

உடனடியாக முடக்க வேண்டும்;

# ஆலோசனைகளைப் புறக்கணிக்காதீர்

## வீடுகளில் உணவுப் பொருள்கள் இல்லை

கொரோனா வைரஸ் நாட்டில் வேகமாகப் பரவி வருவதால் நாட்டை உடனடியாக முடக்க வேண்டும் எனத் தெரிவிக்கும் அக்மீமன தயா ரதன தேரர், நாட்டு மக்களின் வீடுகளில் உணவுப் பொருள்கள் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்த அக்மீமன தயா ரதன தேரர், நாட்டில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருகிறது. எனவே, நாட்டை உடனடியாக முடக்க வேண்டும். வைத்தியர்களின் கருத்துகளை அரசாங்கம் கேட்காது, அரசியல் செய்கின்றனர்.

கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருகிறது. எனவே, இப்போது வைத்தியர்களின் ஆலோசனைகளைக் கேட்காது அரசியல் செய்துக்கொண்டிருந்தால் அதிகமானோர் எதிர்வரும் நாள்களில் உயிரிழப்பார்கள் எனவும் அக்மீமன தயா ரதன தேரர் தெரிவித்தார்.

75ஆவது சுதந்திர தினத்தையொட்டி

# கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டியோர் விவரம்

இந்தியத் துணைத் தூதரகமானது, வடமாகாண கல்வி, கலாசார அலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சுடன் இணைந்து, வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் உள்ள மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியை இணைய வழியில் நடத்தியது.

**வெற்றியாளர்களின் விவரம்:**

யாழ்ப்பாண மாவட்டம்:1ஆம் இடம்- அனோஜிகா சிவகுமார்.(இந்து மகளிர் கல்லூரி-13), 2ஆம் இடம்- கம்சிகா கஜேந்திரன். (வயாவிளான் மத்திய கல்லூரி -13), 3ஆம் இடம்- சுவஸ்திகா சர்வேஸ்வரன் யூனியன் கல்லூரி-12).

கிளிநொச்சி மாவட்டம்: 1ஆம் இடம் - குமார் கிருஷாந்தி (இராமநாதபுரம் மகா வித்தி. -12), 2ஆம் இடம் - சு. பபிதா - கிளிநொச்சி இந்துக் கல்லூரி-13), 3ஆம் இடம் - சு. சுவேதிகா (இராமநாதபுரம் மகாவித்தியாலயம்-12)

முல்லைத்தீவு மாவட்டம்: 1ஆம் இடம்- க. சுடர்ச்செல்வி புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி-13), 2ஆம் இடம் - ம. தினேகா (யோகபுரம் மகா வித்தி. 13), 3ஆம் இடம் - ச. ஷர்மிகா (உடையார்கட்டு மகாவித்தியாலயம்-13).

மன்னார் மாவட்டம்: 1ஆம் இடம் - றசிக்குமார் சசிகலா (முருங்கன் மகா வித்தி. -11), 2ஆம் இடம் - டியோன்மேரி யுஜிதா, 3ஆ இடம் க. சுதர்ஷிகா

# 09 நிமிடத்துக்கு ஒருவர் உயிரிழப்பு

கொரோனா வைரஸ் தொற்றால் கடந்த 13ஆம் திகதிக்குப் பின்னர், ஒன்பது நிமிடத்துக்கு ஒருவர் உயிரிழப்பதாகத் தெரிவிக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி, நாளாந்த உயிரிழப்போரின் எண்ணிக்கை 150 ஆக பதிவாகி வருகிறது எனவும் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்று (15) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அநுரகுமார திஸாநாயக்க எம்.பி, சுகாதார சேவையாளர்களில் பெரும்பாலானோருக்கு தற்போது கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது. வைத்தியசாலைகளில் 50 சதவீதம் கொரோனா தொற்றாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால், மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு, வைத்தியசாலையின் ஊழியர்களுக்கும் கொரோனா வைரஸ் தொற்று பரவி வருவதால், நாட்டின் முழுச் சுகாதாரத் துறையும் சரியும் அபாயத்தில் உள்ளது எனவும் தெரிவித்தார்.

நாட்டை முடக்க வேண்டுமென பலர் எச்சரிக்கை விடுத்து வருகிறார்கள். இதேவேளை, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, கொரோனா வைரஸ் தொடர்பில் அமைச்சரவையில் உரையாற்றுவதற்கு முயற்சித்தபோது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதனைத் தடுத்து நிறுத்தியதாகவும் தெரிவித்தார்.

# சுதந்திர தினக் கொண்டாட்டம்...







இந்தியாவின் 75ஆவது சுதந்திர தினம், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, தலைமையில், கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நேற்று (15) நடைபெற்றது. ( படம்: தூதரக ஊடகப்பிரிவு)







இந்தியாவின் 75ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டம், யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் தலைமையில், யாழ். இந்திய துணைத் தூதரகத்தில் நேற்று (15) காலை நடைபெற்றது.

















பாகிஸ்தானின் 75ஆவது சுதந்திர தினம், கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தில் சனிக்கிழமை (14) கொண்டாடப்பட்டது. பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் முஹம்மத் சாத் கட்டாக் தேசிய கொடியை ஏற்றிவைத்தார். (படங்கள் உதவி: அஸ்ரப் ஏ சமத்)

LK Newspapers Viber Community

# அம்பாறையில் கடலரிப்பு தீவிரம்

பாறுக் ஷிஹான்

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் தீவிரமடைந்து வரும் கடலரிப்பின் காரணமாகப் பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை மக்கள் இழந்து வருவதோடு, அங்குள்ள மீனவர்களும் தொழில் நடவடிக்கைகளில் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருவதாக் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, அம்மாவட்டத்தில் ஒலுவில் தொடங்கி நிந்தவூர், காரைதீவு வரையிலான பகுதிகளில்



ஏற்பட்டுள்ள கடலரிப்பின் காரணமாக, 400 மீற்றர் வரையிலான நிலப்பகுதிக்குள் கடல் புகுந்துள்ளதாகவும், இதனால் மீன்பிடி வாடிகள், பாதிப்புற்றுள்ளதோடு, கரையோரத்திலுள்ள தென்னை மரங்களும் அழித்து விடும் அபாய நிலைமை ஏற்பட்டு வருகின்றது.

இவ்வாறு கடலரிப்புத் தீவிரமடைவதற்கு ஒலுவில் பிரதேசத்தில் துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டுள்ளமையே பிரதான காரணம் என அப்பகுதி மக்கள் நீண்ட காலமாகக் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

கடலரிப்பைத் தடுக்க தற்காலிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் உரிய பலன் கிடைக்கவில்லை. எனவே, இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் நிரந்தரத் தீர்வுக்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென மீனவ சமூகத்தினர் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

மட்டக்களப்பில்

# கொரோனா தீவிரம்

## மூன்றாவது அலையில் 136 பேர் மரணம்

எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் இதுவரை 145 பேர் மரணமடைந்துள்ளனர் எனவும், இவர்களில் மூன்றாவது அலையில் மாத்திரம் 136 பேர் மரணமடைந்துள்ளனர் எனவும், மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியகலாநிதி நா.மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் (14) நடைபெற்ற ஊடகவியலாளர்



சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "முதலாம் கட்ட தடுப்பூசியை இரண்டு இலட்சத்து அறுபத்து ஐந்தாயிரம் பேர் பெற்றுக்கொண்டுள்ளதுடன், இரண்டாம் கட்டத் தடுப்பூசியை அறுபதாயிரம் பேர் பெற்றுக்கொண்டுள்ளனர்.

அத்துடன், இதுவரை இத்தொற்றால் மரணித்தவர்களில் ஆண்கள் 82 பேரும், பெண்கள் 63 பேரும் அடங்குகின்றனர்.

ஓட்டமாவடி, குடுபத்தினச் சேனையில் கொரோனா உடலங்களை அடக்கம் செய்வதற்கு இடப்பற்றாக்குறை நிலவுகிறது. புதியப் இடத்தை அரசாங்கம் அடையாளம் கண்டு, அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் எனவும் தெரிவித்தார்.

# ஓர் இலக்கத் தகட்டில் இரண்டு கார்கள்

கனகராசா சரவணன்

காத்தான்குடிப் பிரதேசத்தில் கடந்த 13ஆம் திகதி கடமையில் ஈடுபட்டிருந்த போக்குவரத்துப் பொலிஸார், வீதியில் பணித்த கார் ஒன்றைச் சந்தேகத்தின் பேரில் நிறுத்திச் சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது, அக்காரின் எஞ்சின் இலக்கமும் செசி இலக்கமும் வேறு வேறாக உள்ளமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து வாடகைக்கு விடப்பட்டுவரும் அக்காரைக் கைப்பற்றிய பொலிஸார், குறித்த காரின் சாரதியையும்



கைது செய்துள்ளனர்.

விசாரணையின்போது காரின் இலக்கத்தில் குருநாகலில் வேறு ஒரு கார் இருப்பதாகக் கண்டறியப்பட்டதையடுத்து, பொலிஸார் இந்த இரு கார்களின் எந்தக் கார் குறித்த இலக்கத்துக்கு உரியது எனக் கண்டறிய விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



கோவிலுக்குச் சென்ற

# மேலும் 30 பேருக்கு கொரோனா தொற்று

ஆர்.ஜெயஸ்ரீராம்

மட்டக்களப்பு, வாகரை, ஊரியன் கட்டு பேச்சியம்மன் கோவிலில், தீ மிதிப்பு உற்சவ வழிபாட்டில் கலந்துகொண்ட 30 பேருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாகப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஏழாம் திகதி மேற்படி கோவிலின் இறுதி உற்சவமான தீ மிதிப்பு நிகழ்வு நடைபெற்று, விழாக்கள் அனைத்தும் முடிவுற்றிருந்தன. இதையடுத்து இந்நிகழ்வில் கலந்துகொண்ட சிலர் நோய்வாய்ப்படவே அவர்களில் 13 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் மூன்று பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

அதைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் (14) மேலும் 65 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 30 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, வாகரையில் இதுவரை 11,550 நபர்களுக்கு முதலாம் கட்ட தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாகவும், தொற்றில் இருந்து மக்களை பாதுகாப்பதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் வாகரை சுகாதார வைத்திய அதிகாரி யோ.விவேக் தெரிவித்தார்.

# மீனவர்களுக்கு உதவிக்கரம்



எப்.முபாரக்

திருகோணமலையில் கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில், வறுமைக் கோட்டின் கீழ் வாழும், சுயதொழில் புரிகின்ற மீனவர்களுக்கு சைக்கிளும் மீன்பெட்டியும் வழங்கும் நிகழ்வு, கந்தளாய் பிரதேச சபை வளாகத்தில் நேற்று (15) நடைபெற்றது.

அப்பிரதேச சபை உறுப்பினர் ஏ.சி.எம் ஜவாஹிர் தலைமையில், அல் ஹிக்மா பவுண்டேசன் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், கந்தளாய் பிரதேச சபையின் தவிசாளர் சமன் ஏக்கநாயக்க, அல்ஹிக்மா பவுண்டேசன் அமைப்பின் முகாமைத்துவ பணிப்பாளர் கலாநிதி இபாதத்துள்ளா (மௌலவி) உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# இறந்த நிலையில் சருகுபுலி மீட்பு

ஏ.எச்.ஏ. ஹூஸைன்

அருகிவரும் விலங்குகளில் ஒன்றான சருகுபுலியொன்று, மட்டக்களப்பு, இருதயபுரம் பிரதான வீதியில் அண்மையில் இடம்பெற்றுள்ள விபத்தில் சிக்கி இறந்துள்ளது.

இதனை மோதிய வாகனம் தப்பிச்சென்றுள்ள நிலையில், சருகுபுலியின் உடல் மீட்கப்பட்டுள்ளது.

சருகு புலியானது சதுப்பு நிலப்பகுதியில் அதிகளவில் வாழ்ந்துவரும் ஒரு விலங்காகும். இவ்வினம் அருகிவரும் நிலையில் இவ்வாறான விபத்துகளில் இறக்கும் நிலையும் அதிகரித்துக் காணப்படுவது சுட்டிக்காட்டத்தக்கது.



கொரோனாவில்

# அரசியல் வேண்டாம்

## சி.வி விக்னேஸ்வரன் எம்.பி வலியுறுத்தல்



கொரோனாவைக் காரணம் காட்டி, அரசியல்வாதிகள் ஈடுபடும் அரசியல் செயற்பாடுகளை உன்னிப்பாகக் கவனித்து, உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்கால கொரோனா நிலைவரம் தொடர்பில், நேற்று (15) அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே, அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தற்போது மிகவும் ஆபத்தான நிலை இலங்கையில் ஏற்பட்டுள்ளது. தினசரி 100 - 150 வரை உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. எனவே, இலங்கையிலுள்ள சகல மொழிபேசும், சகல மதம் சார்ந்த எல்லோரும் கொரோனாவின் கோரப்பிடிக்குள் சிக்கியுள்ளதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

சுனாமியின் போது போரில் ஈடுபட்டிருந்த அரச படைகளும் விடுதலைப் புலிகளும் சில நாள்கள் தமது பகைமையை மறந்து ஒன்று சேர்ந்து மக்களுக்கு உதவி புரிந்ததை இத்தருணத்தில் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

ஆகவே, அரசியல் வேறுபாடுகள் தாண்டி, கொரோனாவிலிருந்து நாட்டை எப்படி மீட்கலாமென நாமனைவரும் ஒன்றுபட்டுச் சிந்திக்க வேண்டும். சுகாதாரத் துறையினரின் அறிவுரைப்படி, தனிநபர் சுகாதாரம் பேணப்படல் அவசியம்.

இரண்டு நாள்களுக்கு மேல் காய்ச்சல், சளி, இருமல், தொண்டை நோ போன்ற சந்தேகத்துக்கிடமான அறிகுறிகள் இருப்பின், உடனடியாக அருகிலுள்ள வைத்தியசாலை அல்லது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைத் தொடர்புகொள்ளல் வேண்டும்.

மிக முக்கியமான விடயம் என்னவென்றால், அனைவரும் தவறாது தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தடுப்பூசியின் பெயரென்ன? எந்த நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டது? இந்தத் தடுப்பூசியைப் போட்டால் உயிரிழப்பு ஏற்படுமா? அமெரிக்காவின் 'பைசர்' தடுப்பூசி வரும்வரை காத்திருப்போம் என்றெல்லாம் பாராது, அந்தந்தப் பகுதிகளில் எந்தத் தடுப்பூசி வழங்கப்படுகின்றதோ அதனை 30 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இரு தடவைகள் தவறாது பெறுதல் வேண்டும்.

அரசியல் காழ்ப்புணர்வுகளைத் தாண்டி, கொரோனா எனும் பேரிடரிலிருந்து நாட்டையும் உயிர்களையும் பாதுகாத்து, வீழ்ந்து போகும் பொருளாதார நிலையிலிருந்தும் மீண்டெழுவதற்கு ஒன்றுபட்டு நிற்போமாக! எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஆனையிறவில் குடைசாய்ந்த டிப்பர்



மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி, பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனையிறவு பகுதியில் நேற்று (15) காலை இடம்பெற்ற விபத்தின் போது ரிப்பர் வாகனம் குடைசாய்ந்துள்ளது. யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த கப் ரக வாகனத்தின் மீது, கிளிநொச்சி நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனம் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது. இதன்போது, ரிப்பர் வாகனம் வீதியை விட்டு விலகி குடைசாய்ந்துள்ளது. சாரதி காயங்களுடன் உயிர் தப்பியுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# செஞ்சோலை நினைவேந்தல்

சண்முகம் தவசீலன்



முல்லைத்தீவு மாவட்டத்தின் வள்ளிபுனம் பகுதியில் அமைந்திருந்திருந்த செஞ்சோலை சிறுவர் இல்ல வளாகத்தில் தலைமைத்துவ பயிற்சிக்காக வருகை தந்திருந்த பாடசாலை மாணவிகளை இலக்கு வைத்து நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் பாடசாலை மாணவிகள் 54 பேரும் சிறுவர் இல்ல பணியாளர்கள் 7 பேரும் உள்ளடங்கலாக 61 பேர் படுகொலை செய்யப்பட்டதன் 15ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்றாகும்.

இந்தப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வு, சிறுவர் இல்ல வளாகத்தில் வருடந்தோறும் அனுஷ்டிக்கப்படுவது வழமை. இருப்பினும், இம்முறை நினைவேந்தல் நிகழ்வுகளை அனுஷ்டிக்கத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு இடங்களிலும் நேற்று (15) பொலிஸார், இராணுவத்தினர், புலனாய்வாளர்கள் நிகழ்வுகளை தடை செய்யும் முகமாக குவிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், முல்லைத்தீவு மகா வித்தியாலய முன்றலுக்கு நேற்றுக் காலை வருகை தந்த தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான பீற்றர் இளஞ்செழியன், உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.



# மடு அன்னையின் வருடாந்த திருவிழா

மன்னார், மடு அன்னையின் வருடாந்த ஆவணித் திருவிழா திருப்பலி, நேற்று (15) காலை 6.15 மணிக்கு கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

திருவிழா திருப்பலியை, மன்னார் மறை மாவட்ட ஆயர் வண. இம்மானுவேல் பெர்னான்டோ ஆண்டகை தலைமையில், சிலாபம் மறை மாவட்ட ஆயர் வண. அருட்கலாநிதி வலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை, குருக்கள் இணைந்து கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

மடு அன்னையின் ஆவணி மாத திருவிழாவை கொண்டாடும் வகையில், மடுத் திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை எஸ். ஜே.பெப்பி சோசை அடிகளார் தலைமையில் கடந்த 6ஆம் திகதி கொடியேற்றம் செய்யப்பட்டது.

தொடர்ந்து நவநாள் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன. சனிக்கிழமை (14) மாலை 6 மணிக்கு வெஸ்பர் ஆராதனை நடைபெற்று, நற்கருணை ஆசிர்வாதம் வழங்கப்பட்டது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.15 மணிக்கு திருநாள் திருப்பலி கூட்டுத்திருப் பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. தொடர்ந்து திருச்சொரூப பவனி நடைபெற்றதோடு, மடு அன்னையின் ஆசி வழங்கப்பட்டது.

நாட்டில் கொரோனா தற்போது தீவிரமடைந்து வரும் நிலையில், மடு திருத்தலத்துக்கு ஏனைய மாவட்டங்களில் இருந்து வருகை தரும் பக்தர்களின் வருகை நிறுத்தப்பட்டு, சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாக திருவிழா ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

(படங்கள்: எஸ்.றொசேரியன் லெம்பேட்)











LK Newspaper Viber Community

# நுவரெலியா மாவட்டத்தில் குற்றங்கள் குறைகின்றன




■ பா.திருஞானம்

நுவரெலியா மாவட்டத்தில் 2016ஆம் ஆண்டிலிருந்து கடந்த 2019ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் துஷ்பிரயோகம், கொலை, கடத்தல் உள்ளிட்ட குற்றங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைவடைந்துள்ளதாக பொலிஸ் தலைமையகத் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

2016ஆம் ஆண்டு துஷ்பிரயோகங்களின் எண்ணிக்கை 19ஆகக் காணப்பட்ட நிலையில், 2017, 2018, 2019ஆம் ஆண்டுகளில் முறையே 9, 7, 9 ஆகக் குறைவடைந்துள்ளன.

கடத்தல் தொடர்பான குற்றச் செயல்களின் எண்ணிக்கையும் 2016ஆம் ஆண்டு 7ஆகக் காணப்பட்ட நிலையில், 2017ஆம் ஆண்டு அந்த எண்ணிக்கை 17ஆக அதிகரித்திருந்தபோதிலும், 2019ஆம் ஆண்டு அந்த எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து ஒன்றாகப் பதிவாகியுள்ளது.

கொலைக் குற்றங்களும் 2016ஆம் ஆண்டு 6ஆகக் காணப்பட்டிருந்த நிலையில் 2017ஆம் ஆண்டு அந்த எண்ணிக்கை 10ஆக அதிகரித்திருக்கிறது. எனினும், 2018ஆம் ஆண்டு 4ஆகவும், 2019ஆம் ஆண்டு 5ஆகவும் பதிவாகியுள்ளன.

இதேபோல, 16 வயதுக்கு மேற்பட்ட பாலியல் துஷ்பிரயோகம், கொலை முயற்சி, சிறுவர்களைக் கொடூரமாக நடத்துதல், தீவைத்து சேதப்படுத்தல், வீட்டை உடைத்துக் களவெடுத்தல், திருட்டு உள்ளிட்டக் குற்றங்களின் எண்ணிக்கையும் 2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2019ஆம் ஆண்டு கணிசமாகக் குறைவடைந்துள்ளன.

தொழில் சட்டங்கள், நியதிகள் தொடர்பாக

# 'தொழிலாளியே விழித்துக்கொள்'

## வேலுகுமார் எம்.பி எடுத்துரைப்பு



தோட்டத் தொழிலாளர்களைத் திட்டமிட்ட அடிப்படையில் ஏமாற்றி, தொழில் சட்டங்களையும் நியதிகளையும் தோட்டக் கம்பனிகள் அப்பட்டமாக மீறிச் செயற்படுவதாகத் தெரிவித்த கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், "இவற்றைத் தடுப்பதற்கான தொழிற்சங்க பொறிமுறையும் திருப்திகரமானதாக இல்லை. எனவே, தொழிலாளர்கள் மத்தியில் விழிப்புணர்வு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்" என்றார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் கண்டி அலுவலத்தில் நேற்று (15) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே, அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் தெரிவித்த அவர், "மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாய் வழங்கப்பட வேண்டும் என்பது தொடர்பில், வர்த்தமானி அறிவித்தலும் வெளியானது. இதன்பிரகாரம், அரச விடுமுறை நாள்கள், ஞாயிற்றுக்கிழமைகளில் தொழிலாளர்கள், தொழில் செய்யும்பட்சத்தில் அவர்களுக்கு ஒன்றரை நாள் சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்ற சட்ட ஏற்பாடும் உள்ளது.

இந்நிலையில், குறித்த சட்ட ஏற்பாட்டை மீறி, நயவஞ்சக வேலை சூத்திரம், திட்டமிடல் ஊடாக தொழிலாளர்களின் தொழில்சார் உரிமையை தோட்டக் கம்பனிகள் மறுத்துவருவதுடன், மேற்படி வர்த்தமானி அறிவித்தலைகூட பலவீனமடையச் செய்துள்ளன.

இந்தப் புதிய நடைமுறை தொடர்பில் தொழிலாளர்களுக்கும் போதிய தெளிவின்மையால், இது தொடர்பில் அவர்கள் கேள்வி எழுப்புவதில்லை.

எனவே, இது தொடர்பில் தொழிலாளர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, தெளிவூட்டல்களை மேற்கொண்டு, சட்டரீதியாக அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளை பெற்றுக்கொடுக்கும் வகையிலேயே, தொழிற்சங்க பொறிமுறை செயற்பட வேண்டும். அதனை மையமாக கொண்டு செயற்படுவதற்கான எமது செயற்பாட்டு அணுகுமுறையை விரிவுப்படுத்த வேண்டும்" என்றார்.

> **"அரச விடுமுறை நாள்கள், ஞாயிற்றுக்கிழமைகளில் தொழில் செய்யும்பட்சத்தில் ஒன்றரை நாள் சம்பளம் வழங்கப்பட வேண்டும். குறித்த சட்ட ஏற்பாட்டை மீறி, தொழிலாளர்களின் தொழில்சார் உரிமையை தோட்டக் கம்பனிகள் மறுத்துவருகின்றன. இந்தப் புதிய நடைமுறை தொடர்பில் தொழிலாளர்களுக்கும் போதிய தெளிவின்மை காணப்படுகிறது**

# இளைஞர்கள் மூவர் நீரில் மூழ்கி மரணம்

■ சமணசிறி குணதிலக, பாலித ஆரியவன்ஸ



புத்தல, கட்டுகஹல்ல குளத்துக்கு நேற்று முன்தினம் (14) பகல் குளிக்கச் சென்ற மூன்று இளைஞர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்த மூவரும் மொனராகலை, மஹாநாம தேசிய பாடசாலையில் உயர்தரத்தில் கற்கும் மாணவர்கள் ஆவர்.

இம்மூவரும் நண்பர் வீட்டுக்குச் செல்வதாகத் தெரிவித்து, 2 மோட்டார் சைக்கிள்களில் வீடுகளிலிருந்து சென்றுள்ளதுடன், மாலையாகியும் வீடு திரும்பாததால், புத்தல பொலிஸில் பெற்றோர் முறையிட்டுள்ளனர்.


இதனையடுத்து, கட்டுகஹல்ல குளத்துக்கருகில் மோட்டார் சைக்கிள்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததை அவதானித்த பொலிஸார், குளத்தில் பிரதேசவாசிகளுடன் இணைந்து தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போதே, மூன்று இளைஞர்களின் சடலங்களும் மீட்கப்பட்டு, நேற்று (15) பிரேத பரிசோதனைகள் நடைபெற்றதென பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தளையில் இரு நகரங்கள்

# ஒரு வாரத்துக்கு மூடப்பட்டன

■ மஹேஷ் கீர்த்திரத்ன




நாட்டில் வேகமாகப் பரவி வரும் கொரோனா தொற்றுக் காரணமாக, மாத்தளை பலாபத்வல நகரம், மடவள-உல்பத ஆகிய நகரங்களின் வர்த்தக நிலையங்கள் அனைத்தையும் எதிர்வரும் 18ஆம் திகதி வரை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள பலாபத்வல வர்த்தக சங்கத்தின் செயலாளர், ஜே.ஜி. திலாநாயக்க, எனவே, இதனால் பொதுமக்கள் ஒன்று கூடுவதையும் அதனால் தொற்று பரவலையும் கட்டுப்படுத்த முடியும் என்றார்.

இதேவேளை, குறித்த பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு ஒரு வாரத்துக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை சேகரித்து வைத்துக்கொள்ளுமாறு, வர்த்தக நிலையங்களை மூடுவதற்கு முன்னர் நடமாடும் வாகனம் ஊடாக அறிவித்ததாகவும் மாத்தளை பிரதேச சபையின் தவிசாளர் கபில பண்டார தெரிவித்துள்ளார்.




# அன்பளிப்பு...

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால், நாவலப்பிட்டி சமர்செட் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கொவிட்-19 இடைநிலை சிகிச்சை நிலையத்துக்கு, நன்கொடையாக சுமார் 350,000 ரூபாய் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.
இந்நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் நிர்வாக அதிகாரி ஆனந்த உயன்வத்த மற்றும் பலர் கலந்துகொண்டனர். (பி.கேதீஸ்)

சமையல் எரிவாயுவைப் பெற்றுக்கொள்ள

# முண்டியடித்த மக்களால் அமைதியின்மை

■ எம்.கிருஷ்ணா

ஹட்டன் நகரில், நேற்று (15) சமையல் எரிவாயுவைப் பெற்றுக்கொள்ள மக்கள் முண்டியடித்த போது, அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

ஹட்டன் நகரிலுள்ள சமையல் எரிவாயு விற்பனை நிலையத்துக்கு, சமையல் எரிவாயு சிலிண்டர்கள் கொண்டு வரப்பட்டன.

இதன்போதே, பெருமளவானோர் அங்கு திரண்டதுடன், அவ்விடத்தில் அமைதியின்மையும் ஏற்பட்டது.

எனினும், அங்குச் சென்ற பொலிஸார், சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தல் விடுத்தனர்.



கண்டி உதவி இந்திய

# தூதுவர் - ஆளுநர் முதல் சந்திப்பு

■ மொஹொமட் ஆஸிக்



கண்டி உதவி இந்திய உயர்ஸ்தானிகராக புதிதாக நியமனம் பெற்றுள்ள டொக்டர் எஸ். ஆத்திராவுக்கும் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ. கமகேவுக்கும் இடையிலான சந்திப்பொன்று, கண்டியில் இடம்பெற்றது.

இது தொடர்பாக கண்டி உதவி இந்தியத்தூதரகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

மத்திய மாகாண அபிவிருத்தித்துறையில் இந்திய அரசாங்கம் மேற்கொள்ளும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டதாகவும் மலையகத்துக்கான இந்தியாவின் வீடமைப்புத் திட்டம், பல்லேகெலேயில் நிறுவப்படும் கண்டிய நடனக் கலைக் கூடத்தினது முக்கியத்துவம் பற்றியும் கலந்துரையாடப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டு உள்ளது. கொவிட்-19 தொற்று காலத்தில், இந்தியாவின் அன்பளிப்பான 'சுவசெரிய' அவசர அம்பியூலன்ஸ் சேவை பெரிதும் பயனளித்துள்ளதை ஆளுநர் பாராட்டியதாகவும், இந்திய-இலங்கை உறவை மேலும் வலுப்படுத்த ஒன்றிணைந்து செயற்படுவதன் முக்கியத்துவம் பற்றியும் கலந்துரையாடப்பட்டதாகவும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பலாங்கொடையில்

# போலி லொத்தர் டிக்கெட்டுகளை அச்சிட்டு விற்றவர் கைது


■ ஏதலம்பாபில்

பலாங்கொடை பிரதேசத்தில் போலியான அதிர்ஷ்ட இலாபச் சீட்டுகளை அச்சிட்டு விற்பனை செய்த சந்தேகநபரை, பொலிஸார் கைது செய்துள்ளனர். பின்னவல, நெல்லிவெல பிரதேசத்தைச் சேர்ந்த இச்சந்தேக நபர் நேற்று முன்தினம் (14) பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். 2,000 ரூபாய் பரிசுப் பணம் கிடைக்கக்கூடியதாக, தேசிய லொத்தர் சபையால் வெளியிடப்படும் டிக்கெட்டுகளைப் போன்றே இவர் அச்சிட்டுள்ளாரென பொலிஸார் தெரிவித்தனர்.

தீயில் சங்கமமான

# மலையகக் கல்விமான் மாரிமுத்து

■ பி.கேதீஸ், ஆ.ரமேஸ்



கடந்த வெள்ளிக்கிழமை (13) உடல் நலக் குறைபாடால் உயிரிழந்த மலையகக் கல்விமானும் வட்டகொடை, தலவாக்கலை தோட்டத்தில் பிறந்தவரும் ஹட்டன்- ஹைலண்ட்ஸ் கல்லூரியிலிருந்து முதலாவதாக பல்கலைக்கழகத்துக்குச் சென்றவருமான, தி. வே. மாரிமுத்துவின் இறுதிக் கிரியைகள், நேற்று முன்தினம் (14) கொட்டகலை- கொமர்சல் மயானத்தில் நடைபெற்றன.

நாவலப்பிட்டி கதிரேசன், புசல்லாவை சரஸ்வதி, நுவரெலியா பரிசுத்த திரித்துவ கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் அதிபரும் முன்னாள் வட்டார கல்வி அதிகாரியும், மத்திய மாகாண தமிழ்க்கல்வி, இந்து கலாசார அமைச்சின் முன்னாள் இணைப்புச் செயலாளருமான இவர், நுவரெலியா பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் மத்திய மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் முன்னாள் சிரேஷ்ட உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தனது 93ஆவது வயதில் காலமான இவருக்கு, மலையக அரசியல்வாதிகள், கல்வியலாளர்கள் உள்ளிட்ட பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

# பூப்புனித விழா; 48 பேர் தனிமையில்

■ எம்.கிருஷ்ணா


எந்தவோர் அனுமதியும் பெறாமல் பூப்பனித நீராட்டு விழா விருந்தை நடத்திய குடும்பத்தவர்கள் உள்ளிட்ட 48 பேர், நேற்று முன்தினம் (14) சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என மஸ்கெலியா பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். சுகாதார அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய, அவ்விடத்துக்குச் சென்ற அதிகாரிகள், நிகழ்வில் கலந்துகொண்டவர்கள், குடும்பத்தவர்கள் உள்ளிட்ட 48 பேரையும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை அவர்களது வீடுகளிலேயே சுய தனிமைப்படுத்தியுள்ளனர்.

நோர்வூட் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் அதிகளவான தொற்றாளர்களும் அதிகளவான உயிரிழப்புகளும் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

பஸ் தரிப்பிடத்தில் இரண்டு பூட்டுகள்;

# அதிகாரிகள், சாரதிகள் அவதி

■ எம்.கிருஷ்ணா



தலவாக்கலை பொது பஸ் தரிப்பு நிலையத்தின் இரண்டாம், மூன்றாம் மாடிகள் மூடப்பட்டு உள்ளமையால், பஸ் நிலைய நேர முகாமைத்துவ முகாமையாளர்கள் தனியார், அரச பஸ் சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

விந்துலை- தலவாக்கலை நகரசபைக்கு உட்பட்ட மேற்படி பஸ் நிலையத்தின் மேல்மாடியிலேயே நேர முகாமைத்துவ அதிகாரிகளுக்கான அலுவலகம், ஓய்வறைகள் உள்ள இடமாக இருக்கின்றதாகவும் தற்போது அவை மூடப்பட்டுள்ளதால் தமது வேலைகளை செய்து கொள்வதற்கு சிரமமாக இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது பற்றி லிந்துலை- தலவாக்கலை நகர சபைத் தலைவர் பாரதிதாஸன் குறிப்பிடுகையில், மேற்படி பஸ் நிலையத்தில் சட்டவிரோத சம்பவங்கள் இடம்பெறுவதாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைவாகவே, தற்காலிகமாக அவற்றை மூடியுள்ளதாகத் தெரிவித்தார்.

ஹட்டன் போடைஸ் தனியார் பஸ்

# சாரதிகள், நடத்துநர்கள் ஆர்ப்பாட்டம்

■ எஸ். சதீஸ்



ஹட்டன்- போடையஸ் வீதியில் பயணிகள் சேவையில் ஈடுபட்டிருக்கும் தனியார் பஸ் சாரதிகளும் நடத்துநர்களும் நேற்று (15) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தனியார் பஸ்ஸின் நடத்துநர் ஒருவர் தாக்கப்பட்டமை, நேர அட்டவணை முறையாக செயற்படுத்தப்படாமை போன்ற காரணங்களால் டிக்கோயா- பட்டல்கலை சந்தியில் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போடைஸ் வீதியில் சேவையில் ஈடுபடும் மற்றொரு தனியார் பஸ்ஸின் நடத்துநரை தாக்கிய ஹட்டன்- சாஞ்சிமலை வீதியில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்ஸின் சாரதியொருவரைக் கைதுசெய்யுமாறு இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன், நேர அட்டவணைப்படி குறித்த பஸ்கள் சேவையில் ஈடுபடாமையால், அடிக்கடி தனியார் பஸ் சாரதிகள், நடத்துநர்களுக்கிடையில் முறுகல் நிலை ஏற்படுவதாகவும் இதனால் பயணிகளே சிக்கல்களுக்கு முகங்கொடுப்பதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்த விடயம் தொடர்பில், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நடத்துநரைத் தாக்கிய தனியார் பஸ்ஸின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார் எனவும் அவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

LK Newspapers Viber Community

# 18 ஆயிரம் மரணங்களைத் தவிர்க்கும் ஊரடங்கு எச்சரிக்கை

ஒவ்வொரு நாளும் இடம்பெறும் கொரோனா மரணங்களும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையையும் நோக்குமிடத்து, ஏற்கெனவே பேசப்பட்ட இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளை மிஞ்சும் அளவுக்கு, இலங்கை சென்று கொண்டிருக்கிறது.

நாடு முடக்கப்படுமா? ஊரங்குச் சட்டம் பிறப்பிக்கப்படுமா? பயணக்கட்டுப்பாடுகள் மீண்டும் விதிக்கப்படுமா, என்ற கோணங்களில் பலவேறான யூகங்கள் கடந்த வாரம் செய்திகளாகின. எனினும், மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடுகள் மட்டுமே இறுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், ஒவ்வொருவரும் சுயகட்டுப்பாட்டுடன் வீடுகளுக்குள்ளே இருக்கவேண்டுமென பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அறிவித்துள்ளது. ஆனாலும், பொதுமுடக்கத்துக்குச் செல்லவேண்டுமென சுகாதார நிபுணர்கள், அரசாங்கத்துக்கு தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

இதற்கிடையில், 18 ஆயிரம் மரணங்களைத் தவிர்க்க வேண்டுமாயின் ஊரடங்கு, பயணக்கட்டுப்பாடு போன்றவற்றை உடனடியாக அமல்படுத்தவேண்டுமென வலியுறுத்தியுள்ள உலக சுகாதார அமைப்பின் நிபுணர் குழு, தவறினால் 2022 ஜனவரியில் கொரோனா மரணங்கள் 30 ஆயிரத்தை எட்டுமென எச்சரித்துள்ளது.

ஓகஸ்ட் 14ஆம் திகதிய புள்ளிவிவரத்தின் பிரகாரம், 5,936 பேர் மரணித்துள்ளனர். அந்த நிபுணர் குழுவின் கணக்கின் பிரகாரம் பார்த்தால், நாளொன்றுக்கு மரணிக்கும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை இன்னும் இரண்டு மடங்காக அதிகரிக்கக்கூடும்.

அத்தியாவசிய தேவைகள் மற்றும் தொழில்களுக்குச் செல்பவர்களைத் தவிர, ஏனையோர் வீடுகளுக்குள்ளே இருக்கவேண்டும். சுகாதாரத்துறையினரின் பாதுகாப்பு முக்கியமானது. அரசாங்கம் முடக்கத்தை அறிவிக்கும் வரையிலும் காத்திருக்காது, சுயகட்டுப்பாட்டுடன் இருப்பதே நன்மை பயக்கும்.

பல பிரதேசங்களில் மக்கள், தாங்களாகவே முடங்கிக்கொண்டமையால், பல நகரங்கள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

ஆனால், 'நீங்கள் என்ன கூறுவது, நாங்கள் என்ன கேட்பது?' எனும் நினைப்பில் இருக்கும் பலரும், விழாக்களை எடுத்து சிக்கிக்கொள்கின்றனர்.

பாலூட்டும் தாய்மார்களுக்கான தானத்தில் கலந்துகொண்ட பலருக்கு கொரோனா, பூப்புனித நீராட்டு விழாவுக்குச் சென்றிருந்தவர்கள் குடும்பத்துடன் தனிமைப்படுத்தப்பட்டனர் என்றெல்லாம் செய்திகள் வருகின்றன. ஆக, ஒவ்வொருவரும் விழிப்புணர்வுடன் செயற்படவேண்டும்.

தன்னுடைய வீட்டைத்தவிர, பக்கத்து வீடுகளுக்குக் கூடச் செல்லக்கூடாது என்பதிலும் கவனம் செலுத்தவேண்டும். வெளியில் சென்று வீடு திரும்புபவர்கள், முதலாவது அலையின் போது எந்தளவுக்கு கட்டுப்பாடுகளுடன் இருந்தீர்களோ, அதைவிடவும் கடுமையாக சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடிக்கவேண்டும்.

"இரண்டு தடுப்பூசிகளையும் ஏற்றி விட்டோம். ஆகையால், எங்களுக்கெல்லாம் கொரோனா தொற்றாது" என்ற வீராப்பு வசனங்களைப் பேசித் திரிபவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். இன்னும் சிலர், தடுப்பூசி போட்டுக்கொள்ளாமல் இருக்கின்றனர். இவ்விரு சாராரிடமிருந்தும் கொரோனா வைரஸ் தொற்றும்.

கொரோனா தடுப்பூசி அட்டை கட்டாயப்படுத்தப்பட்டு உள்ளது. அதனால், ஆகக்குறைந்த பாதுகாப்புக்காகவேனும் தடுப்பூசியை ஏற்றிக்கொள்வதே சிறந்தது. அத்துடன், உலக சுகாதார அமைப்பின் நிபுணர் குழுவின் எச்சரிக்கையிலும் கரிசனை காட்டவேண்டுமென வலியுறுத்துகின்றோம்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

எந்த ஓர் ஊழியரும், தான் பணி செய்யும் அலுவலகத்தில், தமக்குரிய கௌரவத்தையே முதற்கண் விரும்புகின்றார்.

நிறுவனத் தலைவர், உயர்பதவியில் உள்ளவர்கள், தங்கள் ஊழியர்களை அடிமை நிலையில் வைத்திருந்தால், எவர்தான் நிம்மதியாக வேலைசெய்வார்கள்?

சம்பளத்தைவிட, சுய கௌரவமே முதன்மையானது என, ஒவ்வொருவரும் எதிர்பார்ப்பது நியாயமானது.

அலுவலகத்தில் பேதமற்ற நிலையில், பணியாளர்களை நடத்தினால் வேலைகள் தடங்கலின்றி நடைபெறும். எவரையும் ஒதுக்காது, பொறுமையுடனும் அன்புடனும் நடத்தினால், இது எமது நிறுவனம் எனும் மனப்பான்மை ஊழியர்களுக்கும் உருவாகிவிடும்.

அடக்குமுறை, அதிகார துஷ்பிரயோகத்தைக் கையாண்டால் அது நீதிக்குப் புறம்பானது என்றே நோக்கப்படும். தொழிலில் மேற்பார்வை அவசியம்; கட்டுப்பாடுகளும் வேண்டும். இவற்றைச் சாதுரியமாகக் கையாளவேண்டும். சகலருக்கும் கடமையில் நேர்மை முக்கியம்.

- பருத்தித்துறை பால- வைரவநாதன்

## பிசாசுகளும் தேவதைகளும்

# எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்?



என்.கே. அஷோக்பரன்

இன்றைய அரசியல்வாதிகள், தமக்குத்தாமே சூட்டிக்கொள்கின்ற பட்டங்களில், 'செயல் வீரன்' என்பது முதன்மையானதாக இருக்கிறது. "நாம் பேசுபவர்கள் அல்ல; செயல் வீரர்கள்" என்று, தமது பிரசாரங்களை அவர்கள் முன்னெடுக்கப் பிரயத்தனப்படுகிறார்கள்.

இதற்கான காரணம், 'வாழையடி வாழை'யாக அரசியல் என்பது, பேச்சுக்கலையில் மையம் கொண்டதாக அமைந்திருப்பதும், அந்த அரசியலில், அந்த அரசியலால் மக்கள் சலிப்படைந்து உள்ளதுமாகும். ஆகவே, தம்மைச் 'செயல் வீரர்'கள் என்று, அதே பேச்சுக்கலையின் ஊடாக நிறுவுவதில், சமகால அரசியல் தலைமைகள் அக்கறை கொண்டு செயற்படுகின்றன.

தாம் வெறும் வாய்ச்சொல் வீரர்கள் அல்ல; தாம் சாதித்துக்காட்டுபவர்கள் என்று வீரவசனம் பேசி, மக்களுக்குப் புது நம்பிக்கையை அளிக்க எத்தனிக்கிறார்கள். காலம் காலமாகக் கேட்டவற்றால், பார்த்தவற்றால் சலிப்படைந்த மக்களும், வித்தியாசமாக இருக்கிறதே என்று ஒரு மாற்றைத் தெரிவு செய்கிறார்கள். ஆனால், ஏமாற்றம் என்பதே எப்போதும் விடையாகிறது. அதுவே ஜனநாயக அரசியலின் துரதிர்ஷ்டமாகிக் கொண்டிருக்கிறது.

'தெரிந்த பிசாசும் தெரியாத தேவதையும்' என்ற விடயம், சிலருக்கு ஞாபகம் வரலாம். அரசியலில், இந்தத் 'தெரிந்த பிசாசும் தெரியாத தேவதையும்' மிக முக்கிய வகிபாகத்தைக் கொண்டிருக்கின்றன.

மக்கள், கேட்டும் பார்த்தும் அனுபவித்தும், அவற்றால் சலித்தும் வெறுத்தும் போன அரசியல்வாதிகள் தெரிந்த பிசாசுகள். அத்தகைய 'பிசாசு' அரசியல்வாதிகள், நாம் அல்ல என்று, நம்பிக்கை வார்த்தைகளை வாரி வீசி, மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துகிறவர்கள் தெரியாத தேவதைகள்.

இவர்கள், ஏன் தெரியாத தேவதைகள் என்றால், இவர்கள் மக்கள் முன்னிலையில் தம்மை, தேவதைகளாகவும் மக்களின் இரட்சகர்களாகவும் முன்னிறுத்துகிறார்கள். மக்கள் எதிர்நோக்கும் சகல பிரச்சினைகளுக்குமான சகலரோக நிவாரணி, தாமே எனப் பிரசாரம் செய்கிறார்கள். இவர்கள் யாரென மக்களுக்குத் தெரியாது. ஆகவே தெரியாத தேவதைகள் இவர்கள். ஆனால், கசப்பான உண்மை யாதெனில், தெரியாத வரையில்தான் இவர்கள் தேவதைகள். இந்தத் தெரியாத தேவதைக் கதையை, இன்னும் கொஞ்சம் விளக்கமாகப் பார்ப்போம். பிசாசுக்கும் தேவதைக்கும் என்ன வித்தியாசம்? அவற்றின் தன்மைகள் என்ன?

பிசாசுகள் மக்கள் விரும்பாத தன்மை கொண்டவை. தேவதைகள், மக்கள் நேசிக்கும் தன்மையைக் கொண்டவை. பிசாசும் தேவதையும் ஒன்றுக்கொன்று எதிர்முரணான கற்பனை உருவகங்கள். புதிதாக ஒன்று வரும்போது, அதன் தன்மை யாதென எவரும் அறியார். ஆனால், எல்லா அரசியல்வாதிகளும் தன்னை தேவதையாகவே மக்கள் முன்னிலையில் முன்னிறுத்தவும் பிரசாரம் செய்யவும் தலைப்படுகின்றனர்.

எவரும் தம்மைப் பிசாசுகளாக முன்னிறுத்துவதில்லை. அப்படி முன்னிறுத்துவது எதிர்மறையான விளைவையே ஏற்படுத்தும். ஆகவே, எல்லோரும் தம்மைத் தேவதைகளாக முன்னிறுத்தும்போது, மக்கள் முன்னிலையில் இருக்கும் கேள்வி, அவர்கள் தேவதைகளா இல்லையா என்பதுதான்.

இதில் முன்னனுபவத்தைக் கொண்டு, ஒருவர் தேவதையா இல்லையா என்பதை, மக்கள் தீர்மானிப்பதற்கான தரவுகள் அவர்களிடம் இருக்கும். ஆனால், புதியவர்கள் வரும்போது, அந்தத் தீர்மானத்தை எடுப்பதில், மக்களுக்கு சிக்கல் நிலை ஏற்படுகிறது. தர்க்க ரீதியாக ஒருவரை ஏற்பதற்கோ மறுப்பதற்கோ, அவரை மதிப்பிடுவதற்கான தரவுகள் தேவை. அந்தத் தரவு பற்றாக்குறையாக உள்ள போது, மனம் முன்னெடுகோள்களில் சிக்கிக்கொள்கிறது.

சமூக முன்னெடுகோள்களைக் கடந்து சிந்திக்கும் போது, தெரிந்த பிசாசைவிட, தெரியாத தேவதை அதிக புள்ளிகளைகளைப் பெற்றுக்கொள்கிறது. தெரிந்த பிசாசு, பிசாசு என்று தெரியும். தெரியாத தேவதை, தேவதையா இல்லையா என்று தெரியாது. இந்த இடத்தில், இந்தத் தெரியாத தேவதைக்கு பலமாக அமையும் விடயம்தான் நம்பிக்கை (Hope).

மனித வாழ்வின் முக்கிய உந்துசக்தி நம்பிக்கை. நம்பிக்கை இல்லாத வாழ்வு, எரிபொருள் இல்லாத இயந்திரத்தைப் போல, இயங்காது தரித்துவிடும். வாழ்வில் மனிதன் சந்திக்கும் அத்தனை இன்னல்களையும் தடைகளையும் பின்னடைவுகளையும் கடந்து, மனிதன் முன்னோக்கிப் பயணிக்கிறான் என்றால், அந்தப் பயணத்துக்கான 'எரிபொருள்' நம்பிக்கைதான். இந்த நம்பிக்கைதான் மனிதனின் பலம்.

அரசியலைப் பொறுத்தவரையில், வாக்காளர்கள் மத்தியில், பலவீனமாகிக் கொண்டிருப்பதும் இந்த நம்பிக்கைதான். அதற்கு, வாக்காளர்கள் காரணம் என்பதைவிட, அரசியல்வாதிகளின் தந்திரோபாயம் காரணம் என்பதுதான் பொருத்தமானது.

நம்பிக்கைதான் மனிதனின் பலம் என்பது, யாருக்குத் தெரியுமோ இல்லையோ, அரசியல்வாதிகளுக்கு மிக நன்றாகவே தெரியும். அதனை அவர்கள் முழுவதுமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். மக்களின் நம்பிக்கையைத் தமக்குச் சாதகமாகத் திருப்பி, அதிகாரக் கனியை கவர்ந்துகொள்ள விளைகிறார்கள்.

பிரசாரம் அவர்களின் ஆயுதமாகிறது. மக்கள் நம்பிக்கை அவர்களது இலக்காகிறது. தெரிந்த பிசாசுகள் மீது, மக்கள் கொண்டுள்ள அதிருப்தியும் வெறுப்பும், அவர்களுக்கு உரமாகிறது. இப்படித்தான் 'தெரியாத தேவதை'கள் உருவாக்கப்படுகிறார்கள்.

இந்தத் 'தெரியாத தேவதை'கள் பற்றிக் கட்டியெழுப்பப்படும் பிரசார விம்பம், அவர்களைத் தேவதைகளாகவே காணும் நிலையை, மக்களிடத்தில் தோற்றுவிக்கிறது. மக்களும் தம் நம்பிக்கை முழுவதையும் இந்தத் தெரியாத தேவதைகள் மீது முதலிட்டு, தமது நம்பிக்கை மெய்யாகும் என்று காத்திருக்கிறார்கள்.

பெரும்பாலும் இந்த நம்பிக்கை பொய்த்துப் போய்விடுகிறது. தெரியாத தேவதைகளைப் பற்றி, மக்கள் தெரிந்து கொள்ளும் போது, அவர்களும் பிசாசுகளே என்பதை மக்கள் உணர்ந்துகொள்கிறார்கள்.

இந்த இடத்தில் மக்களுக்கு, இன்னொரு பேரதிர்ச்சி பெரும்பாலும் ஏற்படுகிறது. எந்தத் தெரிந்த பிசாசை ஒதுக்கிவிட்டு, இந்தத் தெரியாத தேவதையைத் தேர்ந்தெடுத்தார்களோ, இந்தத் தெரியாத தேவதை, அந்தத் தெரிந்த பிசாசைவிட, மோசமான பிசாசு என்பதை உணரும் வேளையில், நம்பிக்கை என்பது, அந்தத் தெரிந்த மோசமான பிசாசில் மட்டுமல்லாது, ஒட்டுமொத்தமான அரசியலிலும் ஏற்பட்டுவிடுகிறது.

ஆனால், வாழ்க்கை ஒரு வட்டம். நம்பிக்கை இல்லாமல், வாழ்க்கை இயங்காது. மீண்டும் இந்தச் சூழலுக்குள், மக்கள் சிக்கிக் கொள்கிறார்கள். அப்படியானால், இந்தச் சூழலிருந்து விடுபட என்ன வழி?

அது, அத்தனை சுலபமாகச் சொல்லிவிடக் கூடியதொன்றல்ல. 'சாத்திரம் உரைப்பது போல', எது உண்மையான தேவதை, எது உண்மையான பிசாசு என்று, எவராலும் ஆணித்தரமாகக் கூறிவிட முடியாது.

ஆனால், சில அரசியல் அடிப்படைகளை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஜனநாயகம் என்பது, ஒருவகையான விழுமியம். வல்லாட்சிச் சிந்தனைகள், அதிகார மோகம் கொண்டவர்களால், ஒருபோதும் மிகச் சிறந்த ஜனநாயகத் தலைவர்கள் ஆக முடியாது.

அச்சத்தைத் தனது ஆயுதமாகக் கொள்பவன், ஒருபோதும் மிகச் சிறந்த ஜனநாயக ஆட்சியாளனாக இருக்க மாட்டான். தன்னுடைய சித்தாந்தத்தை, வாழ்க்கை முறையை, நம்பிக்கைகளை மற்றவர் மீது திணிப்பவன், ஒருபோதும் நல்ல ஜனநாயக ஆட்சியாளனாக இருக்க மாட்டான்.

"என்னால் ஒரேயடியாக, நாட்டின் கட்டமைப்பை மாற்றிவிட முடியும்" என்பவன், நிச்சயமாகப் பொய்தான் சொல்கிறான். ஒரு ஜனநாயக நாட்டில், ஜனநாயக ரீதியிலான கட்டமைப்பு மாற்றத்தை, ஒரேயடியாகச் செய்துவிட முடியாது. ஆனால், பொது மனம் இதைப்பற்றி எல்லாம் சிந்திக்காது.

விளைவுகள் கிடைக்காத விரக்தியில் இருக்கும் வாக்காளனின் மனம், அதிரடியாகவேனும் ஒரு மாற்றம் நிகழ்ந்துவிட வேண்டும் என்று அவாக்கொள்கிறது. ஆகவே, அப்படி அதிரடி காட்டுகிறவனை, அந்த மனம் மோகிக்கிறது; விளைவு, ஏமாற்றம்!

ஏமாற்றம், மீண்டும் மீண்டும் ஏற்பட ஏற்பட, வாக்காளனின் மனம், அதிரடியான மாற்றத்தை இன்னும் வலுவாக மோகிக்கிறது. ஆனால், பகுத்தறிவின்படி சிந்தித்தால், எந்தவொரு ஜனநாயகக் கட்டமைப்பிலும் மாற்றம் என்பது அதிரடியாக நடக்காது. மாறாக, படிப்படியாகத்தான் இடம்பெறும் என்ற தெளிவு கிடைக்கும்.

ஆனால், தொடர்ந்து ஏமாந்த மனத்துக்கு, இந்தப் பகுத்தறிவின் கருத்து உவப்பானதாக இருக்காது. எப்படி, சத்துணவு நாவுக்குச் சுவை குறைவானதாக இருக்கிறதோ, அதுபோல அரசியல் மீதான ஈர்ப்பும், வாக்காளனுக்கு குறைந்துவிடுகிறது. ஆரோக்கியமற்ற, நாவுக்குச் சுவையான உணவுக்குப் பலரும் எப்படி அடிமையாகிறார்களோ, அதுபோல வாக்காளனின் மனம் அதிரடி அரசியலை விரும்புகிறது.

உடனடி உணவைப்போல, உடனடி மாற்றத்தை மனம் கேட்கிறது. அதன் விளைவு, ஏமாற்றம். ஒரு போதைவஸ்து பாவனையாளனைப் போல, தன்னை அழிக்கும் போதையை, வாக்காளன் மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டிருக்கிறான். அது அவன் தவறா, போதை மருந்து விற்பவனின் தவறா? அவன் கேட்பதால் அல்லவா அவன் விற்கிறான். அவன் விற்பதால் அல்லவா, அவன் கேட்கிறான். ஒரு விசச் சுழல் இது.

இறுதியாக, தலைப்பின் கேள்விக்கு, பதில் சொல்ல ஒரு சிந்தனை. இன்னும், எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் என்று கேட்பது கிடக்கட்டும். இன்னும், எத்தனை காலம் தான் ஏமாறுவார் என்றும் கேட்பதுதான் பொருத்தமாகும். சிந்திக்கவும்!

## கடிதங்கள்

### வெல்லாவெளி, கண்ணபுரத்தில்

### யானைகளால் செங்கல் உற்பத்தி பாதிப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தில், வெல்லாவெளி பிரதேச செயலக நிர்வாக எல்லைக்கு உட்பட்ட கண்ணபுரத்தில், இரவு வேளையில் யானைகளின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென, பிரதேச மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

எல்லைப் பிரதேசங்களில் யானைகளது பிரச்சினை, தீர்வுகாண முடியாத நெருக்கடியாக உள்ளது. கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில், யானைகளால் தாக்கப்பட்டு பலர் உயிரிழந்த சம்பவங்கள் நிகழ்ந்தும், அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை. யானைகளின் தாக்குதல்கள், மனித இனத்துக்குச் சவாலாக மாறியுள்ளன. அண்மையில், குறித்த பிரதேசத்தில் இரவு வேளையில் நுழைந்த யானைகள், குடியிருப்பைச் சேதப்படுத்திய சம்பவம் பதிவாகியுள்ள நிலையில், மீண்டும் யானைகளால் கிராம மக்கள் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். கிராமத்துக்குள் உள்நுழைந்த யானைகள், செங்கல் உற்பத்தியை முழுமையாகச் சேதப்படுத்தியதுடன் வீட்டுத் தோட்டப் பயிர்களையும் சேதப்படுத்தியுள்ளன.

விவசாயம், செங்கல் உற்பத்தியை வாழ்வாதாரமாகக் கொண்ட இம்மக்களின் நீண்ட நாளாகப் பேசப்படுகின்ற யானைகளின் பிரச்சினைக்கு, சிறந்த தீர்வை அரச அதிகாரிகள் மாத்திரமல்லாது அரசியல்வாதிகளும் பெற்றுத்தர வேண்டும் என்பது கண்ணபுர கிராம மக்களின் எதிர்பார்ப்பாகும்.

- இ. சுதாகரன்

செலான் வங்கியின் விழிப்புணர்வுடன்

# மனநிலையை மாற்றத் திட்டம்

செலான் வங்கி, அனைத்து இலங்கையர்களையும் கொவிட்-19 தொற்றுப் பரவலிலிருந்து பாதுகாப்பாக வைத்திருக்கும் வகையில், அதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் முன்னெடுத்திருந்த #ResponsibleMe பிரசாரத் திட்டத்துக்கு, பொதுமக்கள் மத்தியிலிருந்து மாபெரும் வரவேற்புக் கிடைத்திருந்தது. சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பிரசாரத் திட்டம், தற்போது சமூக வலைத்தளங்களில் பரவலாகப் பேசப்படும் பொருளாக அமைந்திருப்பதுடன், பொது அமர்வுகள், ஊடகங்களில் விடயத்துடன் தொடர்புடைய நிபுணர்களால் பேசப்படும் பொருளாகவும் அமைந்துள்ளது.

#ResponsibleMe திட்டம் தொடர்பாக செலான் வங்கியின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைகள் பிரிவின் உதவி பொது முகாமையாளர் காமிக டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், "கொரோனா வைரஸ் புதிய திரிபின் தாக்கத்துக்கு எதிராக, நாம் போராடி வரும் நிலையில், சுகாதார வழிகாட்டல்களைப் பொது இடங்களில் மக்கள் பின்பற்றாமை காரணமாக, நாட்டில் தொற்றுப் பரவல் அதிகரித்துச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. #ResponsibleMe எனும் திட்டத்தினூடாக, தொற்றுப் பரவலிலிருந்து அனைவரையும் பாதுகாத்துக் கொள்வதற்கு தனிநபர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய பொறுப்பு தொடர்பான விழிப்புணர்வு



ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கு, தனிநபர் ஒருவரின் கடமையின் முக்கியத்துவத்தை உணரச் செய்து, அந்தப் பொறுப்புமிக்க மனநிலையை ஏற்படுத்துவது கடினமான காரியமாக அமைந்திருந்தாலும், இந்தச் சவால்கள் நிறைந்த காலப்பகுதியில் அத்தியாவசியமாக உள்ளது. சமூக ஒழுக்கம், கரிசனை, பிரத்தியேக பொறுப்புணர்வுக்கு நேர்த்தியான மனநிலை போன்றவற்றுடன் பொதுச் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுவது காலத்தின் தேவையாக அமைந்துள்ளது. இந்த உறுதி மொழிக்கான எமது சிறு அர்ப்பணிப்புகள், நாட்டின் எதிர்காலத்தில் சக்தி வாய்ந்த நேர்த்தியான தாக்கங்களை ஏற்படுத்தும்" என்றார்.

இந்தத் திட்டத்தை ஆரம்பிக்கும் வகையில், செலான் அணியினர் தன்னார்வ அடிப்படையில் முன்வந்து, பொது மக்கள் மத்தியில் #ResponsibleMe தகவலை கொண்டு செல்லும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். தமது தனிப்பட்ட சமூக ஊடகப் பகுதிகளில் இந்தத் தகவலைப் பதிவிட்டு, சக குடிமக்களையும் இந்த வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை உணர்த்தி இருந்தனர். கருத்துப் பகிர்வு முன்னோடிகளும் இந்தத் திட்டத்தில் கைகோர்த்ததுடன், சமூக வலைத்தளத்தில் அதிகளவு பேசப்படும் விடயமாக #ResponsibleMe அமைந்திருந்தது.

தம்மையும் தமது அன்புக்கு உரியவர்கள், சமூகத்தைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் தொடர்பில் இந்தத் தகவல் பகிர்வு அமைந்திருந்தது.

கைகளைக் கழுவுதல், முகக் கவசங்களை அணிதல் போன்றன தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கு முக்கியத்துவம் வாய்ந்தனவாக அமைந்திருந்த போதிலும், இந்த விடயங்களை மேற்கொள்வதற்கு நபர் ஒருவரைப் பொறுப்புடன் திகழச் செய்வது என்பது, நீண்ட கால அடிப்படையில் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு முக்கியமானதாக அமைந்துள்ளது. இதற்காக அன்புடன் அரவணைக்கும் வங்கி, மெய்நிகர் ஊடக சந்திப்பொன்றையும் ஏற்பாடு செய்திருந்தது. இதன்போது, பேராதனை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் காலிங்க டியுடர் சில்வா, உளவியல் நிபுணர் வைத்தியர் நயனாநந்த குமாரநாயக்க ஆகியோர் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்றுவதன் முக்கியத்துவம் தொடர்பில் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டதுடன், இந்நிலையில் காணக்கூடிய உளவியல் சுகாதார சவால்கள் பற்றியும் உரையாற்றியிருந்தனர்.

## கட்டுவான பகுதியில் புதிய 4G கோபுரம் நிறுவல்

SLT-MOBITEL, தனது புதிய 4G கோபுரத்தை, ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின், பூகெந்தயாய, கட்டுவான பகுதியில் அண்மையில் நிறுவியிருந்தது. இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (TRCSL) 'கிராமத்துக்கு தொடர்பாடல்' (கமட்ட சந்நிவேதனய) திட்டத்தின் அங்கமாக இந்தத் தொலைத் தொடர்பு கோபுரம் நிறுவப்பட்டுள்ளது. கிராமிய மக்கள் அவசியமான தொலைத் தொடர்பாடல் உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டிருப்பதை உறுதி செய்யும் வகையில் இது அமைந்துள்ளது.

இந்தப் புதிய கோபுரத்தை TRCSL இன் பணிப்பாளர் நாயகம் ஓஷத சேனநாயக்க, SLT-MOBITEL இன் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனெவிரட்ன திறந்து வைத்ததுடன், இந்நிகழ்வில் TRCSL, SLT-MOBITEL இன் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

2022ஆம் ஆண்டின் நிறைவில் நாட்டின் சகல குடிமக்களுக்கும் 100% வலையமைப்பை எய்தும் நோக்கை அடிப்படையாகக் கொண்டு



TRCSL செயலாற்றுவதுடன், இதில் SLT-MOBITEL பங்காளராக இயங்கி வருகின்றது. 'கிராமத்துக்கு தொடர்பாடல்' (கமட்ட சந்நிவேதனய) திட்டத்தின் கீழ் மேலும் பகுதிகள் உள்வாங்கப்பட்டு, நாட்டின் பல மாவட்டங்களில் வலையமைப்பு விஸ்தரிப்புக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. TRCSL உடன் இணைந்து SLT-MOBITEL மேலும் பல உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகளை முன்னெடுக்கும்.

டிஜிட்டல் எதிர்காலத்தை செயற்படுத்துவது SLT-MOBITEL இன் எதிர்பார்ப்பாக அமைந்திருப்பதுடன், அனைத்து இலங்கையர்களாலும் இதை அணுகக்கூடியதாக இருத்தல் வேண்டும். TRCSL உடன் இந்தத் திட்டத்தில் இணைந்துள்ள SLT-MOBITEL, தேசத்தின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்புக்கு வலிமை சேர்த்து, குடிமக்களுக்கு வலுவூட்டி, டிஜிட்டல் புரட்சியினூடாக, சமூகத்தில் சுபீட்சத்தை தோற்றுவிப்பது இலக்காக அமைந்துள்ளது.

ருஹுணு பெரஹெராவுக்கு

## SLT-MOBITEL ஆதரவு

SLT-MOBITEL, இந்த ஆண்டின் வருடாந்த கதிர்காமம் ருஹுணு பெரஹரா நிகழ்வுக்கு ஆதரவளித்திருந்தது. சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றி, அண்மையில் இந்த பெரஹரா நிகழ்வு இடம்பெற்றது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கதிர்காம ருஹுணு ஆலயத்தின் பெரஹரா நிகழ்வு பாரம்பரிய வழிமுறைகளைப் பின்பற்றி முன்னெடுக்கப்படுகின்றது. இந்த வைபவங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு பங்களிப்பு வழங்கும் தமது ஆதரவு காசோலையை, தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமேயிடம், SLT-MOBITEL இன் மொபைல் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி சஷிக செனரத் கையளித்திருந்தார்.





சாத்தான்குளம் கொலை வழக்கு:

புதுடெல்லி

# சப்இன்ஸ்பெக்டரின் மனு தள்ளுபடி

சாத்தான்குளம் தந்தை-மகன் கொலை வழக்கில், சிறையிலிருந்து விடுவிக்கக் கோரி பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் சார்பில் உச்ச நீதிமன்றில் ஆட்கொணர்வு ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை நீதிபதிகள் தள்ளுபடி செய்துள்ளனர்.

அந்த மனுவை உச்ச நீதிமன்ற இரண்டு நீதிபதிகள் அடங்கிய அமர்வு விசாரித்தது. இதன்பின்னர், நீதிபதிகள் அளித்த உத்தரவில், நீதிமன்ற உத்தரவை ரிட் மனு மூலம் ரத்துச் செய்ய முடியுமா?



மாற்றுத் தீர்வுக்கு வேறு முடிவு எடுக்க வேண்டுமே தவிர, ரிட் மனு தாக்கல் செய்வது பொருத்தமாகாது.

சாத்தான்குளம் தந்தை-மகன் கொலை வழக்கில், பொலிஸ் சப்இன்ஸ்பெக்டரின் ஆட்கொணர்வு மனுவைத் தள்ளுபடி செய்கிறோம். மேலும், இந்தத் தள்ளுபடி உத்தரவு, இழப்பீடு கோரினால் அதைப் பாதிக்காது என்று நீதிபதிகள் தெரிவித்தனர். மேலும், மதுரையில் நடைபெறும் வழக்கு விசாரணையை வேறு மாநிலத்துக்கு மாற்றக் கோரிய மனுவையும் பிணை மேல்முறையீட்டு மனுவையும் விரைந்து விசாரிக்கும் வகையில் உரிய அமர்வுக்கு பட்டியலிட பதிவாளர் அலுவலகத்துக்கு உத்தரவிட்டனர்.

பெங்களூர்

## சிறுவர்கள் ஆபத்தானவர்களா?

காதலியுடன் உல்லாசமாக இருந்த காட்சிகளை, அலைபேசியில் பதிவு செய்த நான்கு சிறுவர்கள், அச்சுறுத்தல் செய்ததால், ஊழியரொருவர் தனது உயிரை மாய்த்துக்கொண்ட சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

ஹாசன் அரிசிகரேவில் வசித்த ஒருவர், அதே கிராமத்தைச் சேர்ந்த இளம்பெண்ணைக் காதலித்துள்ளார். மூன்று மாதங்களுக்கு முன், காதலர்கள், தங்கள் ஊரின் மலைப்பகுதிக்குச் சென்று, உல்லாசமாக இருந்தனர்.

அப்போது இக்காட்சிகளை, மலைப்பகுதி அருகில் வசிக்கும் நான்கு சிறுவர்கள், தங்கள் அலைபேசியில் வீடியோ பதிவு செய்து கொண்டனர். பின்னர், காதலனிடம் அதைக் காண்பித்து மிரட்டி, 3,000 ரூபாய் பறித்தனர். சில நாள்களுக்குப் பின்னர்,



அவரது வட்ஸ்அப்புக்கு, வீடியோவை அனுப்பி பணம் கேட்டனர்.

இது போன்று அவ்வப்போது மிரட்டி, 3,000, 5,000 ரூபாய் வாங்கினர். இதற்கிடையில், காதலனின் காதலியின் அலைபேசியின் எண்ணைத் தெரிவிக்கும்படி, சிறுவர்கள் தொந்தரவு கொடுத்தனர். அலைபேசி எண்ணைத் தராவிட்டால், வீடியோவை சமூக வலைத் தளங்களில் பரப்புவதாக எச்சரித்தனர்.

இதனால் மனம் நொந்த காதலன் கடிதம் எழுதி வைத்துவிட்டு, விஷம் குடித்து தனது உயிரை கொண்டார்.

சென்னை

## 'ஜெய்ஹிந்த்': அனைவரும் பயன்படுத்த முயற்சிக்க வேண்டும்




நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் நிலையில், 'ஜெய்ஹிந்த்' என்ற வார்த்தையை, நாம் எல்லோரும் பயன்படுத்த முயற்சி செய்ய வேண்டும் என, பாரதிய ஜனதா எம்.எல்.ஏ எம்.ஆர். காந்தி பேசினார்.

தமிழக சட்டசபையில், ஆளுநர் உரையில் 'ஜெய்ஹிந்த்' என்ற வார்த்தை இடம் பெறவில்லை. இது, பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதைச் சுட்டிக்காட்டி, பாரதிய ஜனதா எம்.எல்.ஏ காந்தி சட்டசபையில் பேசியதாவது:

தமிழகத்தின் வேளாண்மை முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதற்காக, இந்தப் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நூறு நாள்களை நிறைவு செய்துள்ள இந்த ஆட்சிக்கு வாழ்த்துகள் என்றார்.

சென்னை

## அரசியல் காழ்ப்புணர்ச்சியே என் மீதான சோதனை



ஜெயலலிதா மறைவுக்கு பின்னர் அண்ணா திராவிட முன்னேற்ற கழக ஆட்சி தொடர நான் முக்கிய காரணம் என்பதால், திராவிட முன்னேற்ற கழகத்துக்கு என் மீது கோபம். அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவே என் மீது பொய் வழக்கு போட்டு சோதனை நடத்தினார்கள். இவ்வாறு, அ.தி.மு.க முன்னாள் அமைச்சர் வேலுமணி தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் வேலுமணி செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"என்னைப் பொறுத்தவரை நான் அனைத்து மதத்தையும் மதிப்பவன்; கடவுளை நம்புகிறேன். 30 வருடங்களாக நான் சபரிமலைக்கு சென்று வருகிறேன். இலஞ்ச ஒழிப்பு அதிகாரிகள் நடத்திய சோதனையில் ரூ.13 இலட்சம் கைப்பற்றப்பட்டதாக கூறப்பட்டது. அதில் உண்மையில்லை. வழக்கை நீதிமன்றத்தில் சந்திப்போம். மக்கள் என் பக்கம் உள்ளார்கள்" என்றார்.

அ.தி.மு.க முன்னாள் அமைச்சர் வேலுமணி வீடு, அவருக்குச் சொந்தமான இடங்கள், நெருக்கமானவர்கள் வீடுகள் என 60 இடங்களில் இலஞ்ச ஒழிப்பு பொலிஸார் சோதனை மேற்கொண்டனர். இதில், பணமும் ஆவணங்களும் பறிமுதல் செய்யப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. வேலுமணியின் வங்கிக் கணக்கும் முடக்கப்பட்டது. இந்நிலையில், சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவைக்கு வேலுமணி சென்றுள்ளார்.

பனாஜி

## தேசிய கொடி ஏற்ற மக்கள் எதிர்ப்பு

கோவாவின் சாவோ ஜசின்டோ தீவில் மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததை தொடர்ந்து, அங்கு தேசிய கொடி ஏற்றும் நிகழ்ச்சியை இரத்து செய்வதாக கடற்படை அறிவித்துள்ளது. எனினும், நிகழ்ச்சியை நடத்த முதலமைச்சர் சாவந்த் அறிவுறுத்தியுள்ளார்.

கோவாவில் முதலமைச்சர் பிரமோத் சாவந்த் தலைமையிலான, பாரதிய ஜனதா ஆட்சி நடக்கிறது. நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாடு முழுதும் உள்ள தீவுகளில் மூவர்ணக் கொடியை ஏற்றி கொண்டாடுவதற்கு, இராணுவ அமைச்சு திட்டமிட்டுள்ளது.

எனினும், தெற்கு கோவாவில் உள்ள சாவோ ஜசின்டோ என்ற தீவில் மூவர்ணக் கொடியை ஏற்ற, அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதையடுத்து கொடி ஏற்றும் நிகழ்ச்சியை இரத்து செய்வதாக, இந்திய கடற்படை அறிவித்தது.எனினும், திட்டமிட்டப்படி தீவில் தேசிய கொடி ஏற்றும் நிகழ்ச்சியை நடத்த, முதலமைச்சர் சாவந்த், கடற்படை அதிகாரிகளுக்கு கோரிக்கை வைத்தார். மேலும், "தேசவிரோத செயல்களில் ஈடுபடுவோர் மீது, கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என, அப்பகுதி மக்களுக்கு முதலமைச்சர் எச்சரிக்கை விடுத்தார்.



புதுடெல்லி

## ராகுலின் 'டுவிட்டர்' புழக்கத்தில்

காங்கிரஸ் எம்.பி, ராகுலின் 'டுவிட்டர்' கணக்கு விடுவிக்கப்பட்டதை அடுத்து, பயன்பாட்டுக்கு வந்தது.

புதுடெல்லியில் தலித் சிறுமி பலாத்காரம் செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். அந்தச் சிறுமியின் பெற்றோரை காங்கிரஸ் எம்.பி ராகுல் சந்தித்து ஆறுதல் கூறினார்.

இந்தச் சந்திப்பு தொடர்பான 'வீடியோ'வை டுவிட்டர் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் ராகுல் பகிர்ந்தார். அதில் சிறுமியின் பெற்றோர் முகம் மறைக்கப்பட வில்லை. 'போக்சோ' சட்டப்படி பாலியல் பலாத்காரத்துக்கு ஆளான சிறுமி, அவரது குடும்பத்தினரின் அடையாளத்தைப் பொது வெளியில் பகிரங்கப்படுத்துவது குற்றமாகக் கருதப்படுகிறது. இதையடுத்து ராகுலின் டுவிட்டர் கணக்கு முடக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள்



சிலரின் டுவிட்டர் கணக்குகளும் முடக்கப்பட்டன.

LK Newspapers Community

ஆப்கானிஸ்தான்

# தலைநகருக்குள் நுழைந்த தலிபான்கள்

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலுக்குள் தலிபான் போராளிகள் நேற்று (15) நுழைந்துள்ளதாக, அந்நாட்டின் உள்நாட்டமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

காபூலிலுள்ள தனது தூதரகத்திலுள்ள இராஜதந்திரிகளை ஹெலிகொப்டர் மூலம் ஐக்கிய அமெரிக்கா வெளியேற்றிய நிலையிலேயே, இந்த உள்நுழைவு இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், அனைத்துப் பகுதிகளிலிருந்தும் தலிபான் வருவதாக றொய்ட்டர்ஸ் இணையத்தளத்துக்குத் தெரிவித்த குறித்த சிரேஷ்ட அதிகாரி, மேலதிக தகவல்கள் எதையும் தெரிவிக்கவில்லை.

இச்சந்தர்ப்பத்தில், காபூலைச் சுற்றி குறிப்பிட்ட எண்ணிக்கையிலான முனைகளிலிருந்து துப்பாக்கி பிரயோகச் சத்தம் கேட்பதாக டுவீட் ஒன்றில் தெரிவித்த ஆப்கானிஸ்தானின் ஜனாதிபதி மாளிகை, சர்வதேசப் பங்காளர்களுடன் கூட்டிணைப்பில் பாதுகாப்புப் படைகள் காபூலைக் கட்டுப்படுத்துவதாகத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, எதுவித உயிரிழப்புகளையும் தலிபான் விரும்பவில்லை என தலிபான் அதிகாரி ஒருவர் றொய்ட்டர்ஸ் இணையத்தளத்துக்கு தெரிவித்தபோதும், யுத்தநிறுத்தத்தை தலிபான் அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, நேற்று கிழக்கு நகரான ஜலலாபாத்தை சண்டையில்லாமல் தலிபான்கள் கைப்பறியிருந்த நிலையில், ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறுவதற்கு காபூல் விமானத் தளம் ஒன்று மாத்திரமே வழியாகவுள்ளது.

> **காபூலைச் சுற்றி குறிப்பிட்ட எண்ணிக்கையிலான முனைகளிலிருந்து துப்பாக்கி பிரயோகச் சத்தம் கேட்பதாக டுவீட் ஒன்றில் ஆப்கானிஸ்தானின் ஜனாதிபதி மாளிகை தெரிவித்துள்ளது**

> **நேற்று கிழக்கு நகரான ஜலலாபாத்தை சண்டையில்லாமல் தலிபான்கள் கைப்பறியிருந்த நிலையில், ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறுவதற்கு காபூல் விமானத் தளம் ஒன்று மாத்திரமே வழியாகவுள்ளது**



துருக்கி

# திடீர் வெள்ளம்; 58 பேர் பலி

துருக்கியின் கருங்கடல் பிராந்தியத்திலுள்ள நகரங்களை அடித்துச் சென்ற திடீர் வெள்ளங்களால் 58 பேர் பலியானதாக அதிகாரிகள் நேற்றுத் தெரிவித்துள்ளனர்.

தென் துருக்கி கரையோர பிராந்தியங்களில், காட்டுத் தீகள் இரண்டு வாரங்களுக்குப் பின்னர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக அதிகாரிகள் பிரகடனப்படுத்தியபோது, வட துருக்கியில் வெள்ளங்கள் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தன.

இந்நிலையில், காணாமல் போனோரை அழிவடைந்த கட்டடங்களில் அவசர நிலைப் பணியாளர் தேடி வருகின்றனர்.



பாகிஸ்தான்

# கிரனேட் தாக்குதலில் 10 பேர் உயிரிழப்பு

பாகிஸ்தானின் பெரிய நகரமான கராச்சியில், கிரனேட் தாக்குதல் ஒன்றில் திறந்த ட்ரக் ஒன்று இலக்கு வைக்கப்பட்டதில், சிறுவர் மற்றும் பெண்கள் உள்ளடங்கலாக குறைந்தது 10 பேர் கொல்லப்பட்டதாக அந்நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுதந்திர தினத்தை பாகிஸ்தான் நேற்று முன்தினம் கொண்டாடிய நிலையில் அன்றிரவே இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

திருமண நிகழ்வு ஒன்றுக்கு சென்று விட்டுத் திரும்பியபோதே இவர்கள் இந்த விபரீதத்தை எதிர்கொண்டுள்ளனர்.

இதற்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை என்பதுடன், எவரும் இதற்கு உடனடியாக உரிமை கோரவில்லை.

இத்தாகுதலில் இருவர் மோசமாக காயமடைந்தும் இருந்தனர்.



ஹெய்ட்டி

## சக்தி வாய்ந்த நிலநடுக்கம்:

# 304 பேர் பலி; 1,800 பேர் காயம்



கரீபியத் தீவான ஹெய்ட்டியை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஒன்று தாக்கியதில், குறைந்தது 304 பேர் உயிரிழந்ததுடன், 1,800க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

7.2 ரிச்டர் அளவிலான இந்நிலநடுக்கமானது ஹெய்ட்டியின் மேற்குப் புறத்தை நேற்று முன்தினமிரவு காலையில் தாக்கி, தேவாலயங்கள் மற்றும் ஹொட்டல்கள் உள்ளடங்கலாக கட்டடங்களை தகர்த்திருந்தது.

இந்நிலையில், ஒரு மாத காலத்துக்கு அவசர கால நிலையை ஹெய்ட்டியின் பிரதமர் அறிவித்துள்ளார்.

இந்நிலநடுக்கத்தின் அதிர்வானது நிலநடுக்கம் தாக்கிய இடத்திலிருந்து 125 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள ஹெய்ட்டியின் தலைநகர் போர்ட்-ஓ-பிறின்ஸில் உணரப்பட்டுள்ளது.

பங்களாதேஷ்

## படகு மூழ்கியதில் 27 றோகிஞ்சா

# அகதிகளை காணவில்லை

பங்களாதேஷ் தீவு முகாம் ஒன்றிலிருந்து வெளியேறும் முயற்சி ஒன்றில் றோகிஞ்சா அகதிகளின் படகு மூழ்கியதில் குறைந்தது 27 றோகிஞ்சா அகதிகளைக் காணவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் 41 றோகி ஞ்சாக்கள் மீன்பிடிப் படகுடன் மூழ்கியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். வங்காள விரிகுடாவில் சீற்றமான கடலைச் சந்தித்த பின்னரே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, 14 பேர் ஆபத்தில்லாமல் திரும்பியதாக பஹஸன் சார் தீவின் பொலிஸ் தலைவர் மஹெ அலாம் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனோரில் சிறுவர்களும், பெண்களும் உள்ளடங்குவதாக அரசாங்க அதிகாரி சுஜித் குமார் சன்டா தெரிவித்துள்ளார்.

> **வங்காள விரிகுடாவில் சீற்றமான கடலைச் சந்தித்த பின்னர், பங்களாதேஷ் தீவு முகாம் ஒன்றிலிருந்து வெளியேறிய றோகிஞ்சா அகதிகளின் படகு மூழ்கியது**

## இந்தியாவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# முன்னிலை பெற்ற இங்கிலாந்து



இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் இங்கிலாந்து முன்னிலை பெற்றுள்ளது.

இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில், லோர்ட்ஸில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்த குறித்த டெஸ்டின் நேற்று முன்தின மூன்றாம் நாள் முடிவிலேயே இங்கிலாந்து முன்னிலை பெற்றுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

இந்தியா: 364/10 (துடுப்பாட்டம்: லோகேஷ் ராகுல் 129, றோஹித் ஷர்மா 83, விராட் கோலி 42, இரவீந்திர ஜடேஜா 40, றிஷப் பண்ட் 37 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேம்ஸ் அன்டர்சன் 5/62, ஒலி றொபின்ஸன் 2/73, மார்க் வூட் 2/91, மொயின் அலி 1/53)

இங்கிலாந்து: 391/10 (துடுப்பாட்டம்: ஜோ றூட் ஆ.இ 180, ஜொனி பெயார்ஸ்டோ 57, றோறி பேர்ண்ஸ் 49, மொயின் அலி 27, ஜொஸ் பட்லர் 23 ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் சிராஜ் 4/94, இஷாந்த் ஷர்மா 3/69, மொஹமட் ஷமி 2/95)

## டயலொக் அழைப்புத் தொடர்:

# பச்சை அணியை வென்ற நீல அணி




டயலொக் இலங்கை கிரிக்கெட் சபை அழைப்பு இருபதுக்கு - 20 லீக் தொடரில், பல்லேகலயில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை கிரிக்கெட் சபை பச்சை அணியுடனான போட்டியில் இலங்கை நீல அணி வென்றது.

> **சனிக்கிழமை நடைபெற்ற இலங்கை கிரிக்கெட் சபையின் சிவப்பு அணியுடனான இலங்கை கிரிக்கெட் சபையின் நீல அணி வென்றிருந்தது. மற்றொரு போட்டியில் சிவப்பு அணியை சாம்பல் அணி வென்றிருந்தது**

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பச்சை

பச்சை: 180/2 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: பதும் நிஸங்க ஆ.இ 76 (54), கமிந்து மென்டிஸ் ஆ.இ 53 (25), லஹிரு உதார 44 (39) ஓட்டங்கள். பந்துவீச்சு: மஹீஷ் தீக்ஷன 2/12 (4))

நீலம்: 181/5 (19.3 ஓவ.) (துடுப்பாட்டம்: சதீர சமரவிக்கிரம 47 (38), சஹான் ஆராச்சிகே 38 (22), அஷேன் பண்டார ஆ.இ 36 (18), தனஞ்சய லக்ஷன் 27 (21) ஓட்டங்கள்)

இந்நிலையில், மற்றொரு போட்டியில் இலங்கை கிரிக்கெட் சபையின் சிவப்பு அணியை இலங்கை கிரிக்கெட் சபையின் சாம்பல் அணி வென்றிருந்தது.

தவிர, கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இலங்கை கிரிக்கெட் சபையின் சிவப்பு அணியுடனான இலங்கை கிரிக்கெட் சபையின் நீல அணி வென்றிருந்தது.



## தேசிய விளையாட்டு தினத்தைமுன்னிட்டு

# கல்முனையில் உடற்பயிற்சி நிகழ்வு

எம்.என்.எம் அப்ராஸ், அஸ்ஹர் லாபிர்

தேசிய விளையாட்டு தினத்தை முன்னிட்டு, இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைவாக அரசாங்க உத்தியோகத்தர்களின் விளையாட்டுத் திறனையும், உடற்பயிற்சி திறனையும் விருத்தி செய்யும் வகையில் கல்முனை பிரதேச செயலகத்தில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான 10 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்யும் நிகழ்வானது, கல்முனை பிரதேச செயலக கணக்காளர் யூ. எல் ஜவாஹிர் தலைமையில் பிரதேசசெயலக வளாகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம். ஜௌபர், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர்ஏ.ஆர்.எம். சாலிஹ், நிர்வாக உத்தியோகத்தர் எம்.என். எம். றம்சான், கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர் யூ.எல். பதியூத்தீன், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் யூ.எல். ரமீஸ் உட்பட உத்தியோகத்தர்பலர் கலந்து கொண்டனர்

கல்முனை பிரதேச செயலக இளைஞர் சேவை உத்தியோகத்தர் ஏ. எல்.எம். அஸீம் மற்றும் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் எம்.என். சபாயி ஆகியோரின் பயிற்சி நெறிப்படுத்தலில் குறித்த உடற்பயிற்சி நிகழ்வு இடம்பெற்றது.



## சாஹிரா அதிபருடன்

# ஸ்போர்ட்ஸ் குழுவினர் சந்திப்பு

எம்.யூ.எம். சனூன்



புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையின் அதிபர் ஐ.ஏ. நஜீமுடன் பழைய மாணவர் சங்கச் செயலாளரும், சாஹிரா ஸ்போர்ட்ஸ் குழுவின் அங்கத்தவருமான ஏ.டபிள்யூ.எம்.நஸீப் மற்றும் இதர சாஹிரா ஸ்போர்ட்ஸ் குழு உறுப்பினர்கள் புத்தளம் "வில்பத்து கேட்" உணவகத்தில் சிநேகபூர்வ கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டனர்.

இதில், சாஹிரா ஸ்போர்ட்ஸின் கடந்த கால அடைவுகள் மற்றும் எதிர்கால திட்டங்கள் பற்றி பேசி இணக்கமான முடிவுகளை எட்டியதோடு இதற்கான முழு ஒத்துழைப்பையும் வழங்குவதாகவும் அதிபர் உறுதியளித்தார்.

இதனையடுத்து சாஹிரா ஸ்போர்ட்ஸின் உத்தியோகபூர்வ சீருடை அதிபருக்கு கையளிக்கப்பட்டது.

## மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிராக

# முன்னிலையில் பாகிஸ்தான்



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது டெஸ்டில் முன்னிலையில் பாகிஸ்தான் காணப்படுகின்றது.

இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், ஜமைக்காவில் கடந்த வியாழக்கிழமை இந்த டெஸ்டின் நேற்று முன்தின மூன்றாம் நாள் முடிவிலேயே பாகிஸ்தான் முன்னிலையில் காணப்படுகின்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மே. தீவுகள்

பாகிஸ்தான்: 217/10 (துடுப்பாட்டம்: பவாட் அலாம் 56, பாஹீம் அஷ்ரஃப் 44, பாபர் அஸாம் 30, மொஹமட் றிஸ்வான் 23 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேஸன் ஹோல்டர் 3/26, ஜெய்டன் சீயல்ஸ் 3/70, கேமார் றோச் 2,47, கைல் மேயர்ஸ் 1/28)

மே. தீவுகள்: 253/10 (துடுப்பாட்டம்: கிறேய்க் பிறத்வெய்ட் 97, ஜேஸன் ஹோல்டர் 58, ஜேர்மைன் பிளக்வூட் 22, ஜோஷுவா டா சில்வா 21, றொஸ்டன் சேஸ் 21 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷகீன் ஷா அஃப்ரிடி 4/59, மொஹமட் அப்பாஸ் 3/43, பாஹீம் அஷ்ரஃப் 1/37, ஹஸன் அலி 1/54)

பாகிஸ்தான்: 160/5 (துடுப்பாட்டம்: பாபர் அஸாம் ஆ.இ 54, அபிட் அலி 34, மொஹமட் றிஸ்வான் 30, அஸார் அலி 23 ஓட்டங்கள். பந்துவீச்சு: கேமார் றோச் 2/15, ஜெய்டன் சீயல்ஸ் 2/50, ஜேஸன் ஹோல்டர் 1/27)

LK Newspapers Viber Community

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 16 ஒகஸ்ட் 2021, இல. 8, ஹுணுப்பிட்டி குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.